ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

01.12.2010 - மலர் 07, இதழ் 39



300 ஆவது இதழ்



## 'ரொபோ' மனிதனை உருவாக்கியுள்ள இலங்கையர்



## இத்தாலியை ஐக்கியப்படுத்திய வரலாற்று நிகழ்வுகள்

விலை ரூபா 15/-



நமது வாசனைத் திரவியங்கள்



கைத்தொழில் சகாப்தம் எவ்வாறு உருவானது?



மீண்டும் 'ஹெரிபொட்டர்' வசூலில் சாதனை

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னன் நரேந்திரசிங்கனின் மறைவு

கி.பி 1783 இல் மன்னன் நரேந்திரசிங்கன் சுகயீனம் அடைந்தார். அவர் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக ஒல்லாந்தரின் உதவியை நாடினார். அதன்படி, டேனியல் எனும் வைத்தியர் ஒருவர் கண்டிய மன்னனின் மாளிகைக்கு சென்றார். அவர் பல்வேறு சிகிச்சைகளை மேற்கொண்டார். எனினும், உரிய பலன் ஏதும் கிடைக்கவில்லை. கி.பி 1739 மே மாதம் 13 ஆம் திகதி மன்னர் நரேந்திரசிங்கன் காலமானார்.

ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் எப்பொழும் சமாதானத்தையே விரும்புபவராகத் திகழ்ந்தார். ஒல்லாந்தருடன் சமாதான மாக நட்புறவுடன் செயற்பட்டாலும் முக்கியமான பல தேவைகளை அவரால் நிறைவேற்ற முடியாமல் போனது. குறிப்பாக, துறைமுகங்களை செயற்படுத்த முடியாமல் போனது. இதனால், கோபமடைந்த மன்னர் சில துறைமுகங்களுக்கு வேறு சில ஐரோப் பிய இனத்தவர்களை அழைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். அவர்களிடம் உதவிகளைப் பெற்று ஒல்லாந்தர்களை விரட்டி அடிக்க முயற்சித்தார்.

இதனால், போர்த்துக்கேயரை மீண்டும் அழைப்பதற்கு எண்ணினார். அதுகுறித்து மத்திரி சபைக்கும் அறிவித்தார். போர்த்துக்கேயர் குறித்து பிதா ஜாக்கொமே கொன்சல்வேஸ் அடிகளாரிடம் மன்னர் கருத்துக் கேட்டார். அவ்வேளை, போர்த்துக்கேயரின் பலம் மிகவும் பலவீனமாக இருப்பதாகவும் அடிகளார் மன்னனுக்குத் தெளிவுபடுத்தினார். மன்னன் அதன்பின் அந்த எண்ணத்தைக் கைவிட்டார். பின்னர் கண்டிய முன்னாள் மன்னர்கள் செயற்படுத்திய முறைகளை நடைமுறைபடுத்த ஆரம்பித்தார். இதன் ஓர் அங்கமாக, கரையோரப் பகுதிகளில் கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் ஏற்படுத்தினார்.

அதனால், ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்கு பெரும் நட்டம் ஏற்பட்டது. அதனால், அவர்களுக்கு பல மாற்றங்களை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மன்னன் நரேந்திரசிங்கன் பௌத்தராக இருந்தாலும் கத்தோலிக்கர்களையும் உயர்வாகவே மதித்தான். அவர்களை உரிய முறையில் பாதுகாத்தார். எனினும், மன்னன் நரேந்திரசிங்கனுக்கு பிள்ளைகள் எவரும் இல்லாத காரணத்தால் காலப்போக்கில் அரசாட்சி உரிமையில் மாற்றம் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலத்தை கற்பிப்பதற்கு புதிய வழிமுறை அறிமுகம்

## ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள்



ஆங்கில மொழி கற்பித்தலுக் கான புதிய கற்பித்தல் வழிமுறை அடுத்த வருடத்திலிருந்து அறிமுகப் படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தற்போது ஆங்கில ஆசிரியர்களாக உள்ளவர்களுக்கு ஆங்கில இலக்கணத்தை கற்பித்தல் முறை மாத்திரமன்றி; அதற்கு மேலதிகமாக, ஆங்கில மொழி பேசுதல் மற்றும் செவிமடுத்து விளங்கிக்கொள்ளல் ஆகியவை தொடர்பான கற்பித்தல் முறைகள் பற்றியும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆங்கிலத்தில் இலக்கணம் மட்டுமே கற்பிப்பதனால் உரிய இலக்கை அடைய முடியாதிருப்பது இனங்காணப்பட்டுள்ளமையின் காரணமாகவே, இந்தப் புதிய வழிமுறை கையாளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

ஏற்கனவே, 70 சதவீதமான ஆங்கில ஆசிரியர்களுக்கு இவ்வாறான கற்பித்தல் வழிமுறை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி அடைந்துவிடும் என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# 300 ஆவது இதழிலே உங்களுடன் பாசமுடன்...!

**வணக்கம், அஸ்ஸலாமு அலைக்கும்;**

*அன்பு வாசக மணிகளே!*

உங்கள் அபிமான 'விஜய்' பத்திரிகையின் 300 ஆவது இதழ் உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது. இலங்கையைப் பொறுத்த வரை மாணவர்களுக்கும் இளையோருக்கும் என்று வெளிவருகின்ற அறிவுசார் பத்திரிகையொன்று 300 ஆவது இதழை எட்டிப் பிடித்துள்ளதென்றால் ஒருபுறம் அது ஒரு சாதனைக்கும் இன்னொரு புறம் வியப்பிற்கும் உரியது. ஏனென்றால், அறிவுசார் விடயங்களைத் தாங்கி வருகின்ற பத்திரிகையொன்று வெளியிடப்பட்டால் தேசிய மட்டத்தில் அதற்கென்று வாசகர் வட்டம் இருப்பார்களா? என்ற ஒரு சந்தேகம் நீண்டகாலமாகவே எமது நாட்டில் நிலவி வந்தது. அந்த சந்தேகத்தைத் தகர்த்தெறிந்த ஒரே பத்திரிகை 'விஜய்'தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். மாணவ சமூகத்தின் மீதும், ஆசிரியர்கள் மீதும், பெற்றோர்கள் மீதும் புத்திஜீவிகள் மீதும் நாம் வைத்திருந்த நம்பிக்கையின் காரணமாகவே, இது சாத்தியப்பட்டது. எனவே, இந்த வெற்றியின் பங்காளர்கள் நீங்கள்தான்.

''வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்'' என்று மாணவர்களுக்கு அறிவுரை கூறினாலும், எதை வாசியுங்கள் என்று கூறமுடியாத ஒருநிலை முன்னர் இருந்தது. ஆனால், இன்று 'விஜய்' பத்திரிகையை வாசியுங்கள் என்று மாணவர்களிடம் குறிப்பிட்டுக் கூறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்று ஆசிரியர்கள் நம்மிடம் தெரிவிப்பது பெரும் மகிழ்ச்சியாகவே இருக்கின்றது. இது நமது பொறுப்புணர்வை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

அவ்வாறே, இந்த வருடம் நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை, உ/தர பொதுப் பரீட்சை ஆகியனவற்றை முன்னிட்டு 'விஜய்'யில் வழங்கிய மாதிரி வினாத்தாள்களை ஒத்ததாக அதே சாயலிலேயே இம்முறை பரீட்சை வினாத்தாள்களும் அமைந்திருந்ததாக அநேகர் சுட்டிக்காட்டியிருந்தனர். இது 'விஜய்' மீதான நம்பிக்கையை மேலும் அதிகரித்துள்ளது. இதே கடமையை நாம் தொடர்ந்தும் செய்வோம்.

'விஜய்'யில் இதர ஆக்கங்கள்கூட, வாசகர்களின் எதிர்பார்ப்பை ஒட்டியே வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே, புதிய பல விடயங்களை மேலும் சேர்ப்பதற்கு எண்ணியுள்ளோம். அந்தவகையில், உங்கள் ஆலோசனைகளையும் நாடி நிற்கின்றோம். அத்துடன், தொடர்ந்தும் நாம் கரம் கோர்த்துக் கொள்வோம். நல்ல நண்பர்களுடன் பழகுங்கள், அதில் 'விஜய்' பத்திரிகையையும் ஒரு நண்பனாக சேர்த்துக் கொள்ளுங்கள். நல்ல நண்பன் எப்போதும் நல்ல வழிகளையே காட்டி நிற்பான். மீண்டும் சந்திப்போம்!

நன்றி

அன்புடன்
**வி.ரெட்லி ஹெரிசன்**
*(ஆசிரியர்)*

# தொழில்நுட்பக் கல்லூரி கற்கைநெறிகளுக்கு மாணவர் அனுமதி

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 38 தொழில் நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படவுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான முழு நேர, பகுதி நேர மற்றும் மாலை நேர கற்கைநெறிகளுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

யாழ்ப்பாணம், சம்மாந்துறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் தமிழ்மொழி மூலம் கற்கைநெறிகள் நடாத்தப்படும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை



10.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு உரிய தொழில்நுட்பக் கல்லூரி அதிபருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கையில் இணையத் தணிக்கை மென்பொருள்

ஒழுக்கநெறி தவறிய காட்சிகளை வழங்கும் இணையத்தள சேவைகளை தடுக்கக்கூடிய புதிய கணினி மென்பொருள் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அறியவருகின்றது. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவே இந்தப் புதிய மென்பொருளை அறிமுகப்படுத்தவுள்ளது.

இதையிட்டு இணைய சேவையினரோடு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன், இந்த மென்பொருளை எவ்வாறு பயன்படுத்துவது, அறிமுகப்படுத்துவது தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பிரிவுடனும் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

அடுத்து வரும் ஆறு மாதங்களில் இந்த புதிய மென்பொருள் பாவனைக்கு வந்துவிடும். அதனைப் பயன்படுத்துவதன் மூலம் நெறிமுறை தவறிய காட்சிகளை வழங்கும் இணைய சேவைகளை அது தானாகவே தடுத்துவிடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.




60 DAYS BASIC / SPOKEN ENGLISH / தபால் மூல ஆங்கில பாடநெறி

5ம் ஆண்டு புலமை பரீட்சையை முடித்த மாணவர்களுக்கு என விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி

எமது இந்த BASIC / SPOKEN ENGLISH அடிப்படையும் பேச்சுப் பயிற்சி பாடநெறியானது 7 வயது தொடக்கம் 12 வயது வரையான சின்னம் சிறார்க்கு சிறந்த பாடநெறியாகும்
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH

பாடநெறியை தொடரும் உங்களுக்கு
அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும்
30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்


இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில் சகாப்தம் எவ்வாறு உருவானது?

ஆண்டைக்காலம் முதல் மனிதன் ஏனைய உயிரினங்களிலிருந்து வேறுபட்ட நிலையிலேயே வாழ்ந்து வந்துள்ளான். காலம் செல்லச் செல்ல மனித இனம் பெருகியது. இதனால், அவனது தேவைகள் அதிகரிக்கலாயின. மனிதன் சமூகத்துடன் ஒன்றி வாழும் நிலை ஏற்பட்டபோதுதான், தான் உற்பத்தி செய்வதை மற்றவர்களுக்கும் கொடுத்து, மற்றவர்கள் உற்பத்தி செய்வதை தான் பெற்று வாழும் நிலை உருவாகத் தொடங்கியது. இதுவே கைத்தொழில் சகாப்தத்தின் ஆரம்பமாகும்.



இச்சகாப்தம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. அவை குடும்பப் பொருளாதார முறை, கைவினைஞர் பொருளாதார முறை, சுய கைத்தொழில் முறை, பெருந்தொழிலாகப் பொருளாதார முறை அல்லது நவீன பொருளாதார முறை ஆகும்.



## குடும்பப் பொருளாதார முறை

ஒரு குடும்பத்தினர் தம்மிடமுள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி தமக்குத் தேவையானவற்றைத் தயாரித்து தாமே பாவிப்பது குடும்பப் பொருளாதார முறையாகும்.

## கைவினைஞர் பொருளாதார முறை


கைவினைஞர் பொருளாதார முறையானது, குடும்பப் பொருளாதார முறையிலிருந்து சிறிது வேறுபட்டது. இதில் சில தொழில்களுக்கென்றே, கைதேர்ந்த தொழிலாளர்கள் உருவாகினர். கொல்லர், தச்சர், குயவர், நெசவாளர் என்போர் தம்மிடமுள்ள மூலப் பொருட்களையும் கருவிகளையும் வைத்துத் தமது வீடுகளில் இருந்தவாறே தொழில் செய்து, பொருட்களை உற்பத்தி செய்து மற்றவர்களுக்கு விற்பனை செய்தனர். இதன் மூலம் குறிப்பிட்ட தொழிலில் கைதேர்ந்தவர்களாக உருவாகினர். ஒரு நெசவாளருக்குக் கத்தி ஒன்று தேவைப்பட்டால், அதனை நெசவாளரே செய்து கொள்ள முடியாதநிலை இருப்பதால் அவர் ஒரு கொல்லரையே நாட வேண்டும்.

## சுய கைத்தொழில் முறை

கைவினைஞர் பொருளாதார முறையின் வளர்ச்சியை வர்த்தகர்களும் தரகர்களும் கட்டுப்படுத்தியதன் விளைவாகவே, சுய கைத்தொழில் முறை உருவானது. அதனால், கைவினைஞர்களின் ஏகபோக உரிமை காலக்கிரமத்தில் குறையத் தொடங்கியது. வர்த்தகர்களும் தரகர்களும் மூலதனமிட்டுக் கைவினைஞர்களிடம் இருந்து பொருட்களைச் செய்து விற்பனை செய்யத் தொடங்கிய பொருளாதார முறையே இதுவாகும். இதனால், கைவினைஞர் தம் வீட்டில் இருந்தபடியே, வர்த்தகர் அல்லது தரகர் தரும் மூலப்பொருட்களைக் கொண்டு பொருட்களைச் செய்து, தமக்குரிய கூலியைப் பெற்றனர். இப்பொருளாதார முறையில் பொருளை உருவாக்குவது மட்டுமே கைவினைஞனின் கடமையாக இருந்தது. பொருளை விற்பனை செய்வதும் அதன் மூலம் இலாபம் பெறுவதும் வர்த்தகர் அல்லது தரகராக இருந்தனர். இப்பொருளாதார முறையே ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சி தோன்றும் வரை உலகெங்கும் நிலவி வந்தது.



பெருந்தொழிலகப் பொருளாதார முறை அல்லது நவீன பொருளாதார முறையினை அடுத்து வந்த முறையே பெருந்தொழிலகப் பொருளாதார முறையாகும். 1750 இல் உருவான கைத்தொழில் புரட்சியின் காரணமாக, இயந்திரங்கள், உபகரணங்கள், பாரிய உற்பத்திச் சாதனங்கள், அனைத்துலகச் சந்தைப்படுத்தும் முறை என்பன உருவாயின. இதன் மூலமே முதலாளித்துவ அமைப்பொன்று உலகில் உருவானது. இம்முறையின் மூலம் தேவை உணரப்பட்டு பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. சிக்கலான தொழிற் பிரிவுகள் தோன்றின. பண்டமாற்றிற்குப் பதிலாகப் பணப்புழக்கம் ஏற்பட்டது. கடன் முறைகள், வங்கிகள், சந்தைகள், பல்தொழில் நிறுவனங்கள் தேசிய ரீதியாகவும் உலக ரீதியாகவும் ஏற்படுத்தப்பட்டன. இம்முறை காரணமாக, விவசாயத் துறையில் இருந்து வந்த பழைமையான முறைகள் மாறி, புதிய விஞ்ஞான ரீதியான முறைகள் வழக்கிற்கு வந்தன.



இப்பொருளாதார முறையே ஐரோப்பியரைக் கிழக்கு நோக்கி நகர வைத்தது. ஐரோப்பியர்கள் கிழக்கத்திய நாடுகளில் தமது பொருளாதாரத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், தொழிலாளர்களைச் சுரண்டவும் குடியேற்ற ஆதிக்கத்தை உண்டாக்கிக் கொள்ளவும் இப்பொருளாதார முறையே வழிவகுத்தது.

**ஐ.ஏ.ஸத்தார்**

# நமது வாசனைத் திரவியங்கள்

**புராதன காலந்தொட்டு இலங்கையின் வாசனைத் திரவியங்கள் உலக மக்களைக் கவர்ந்து வந்துள்ளன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், அரேபியர், பாரசீகர் என்போர் இலங்கையை நாடிவரக் காரணமாக அமைந்ததும் இந்த வாசனைத் திரவியங்களே எனலாம்**

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற வாசனைத்திரவியங்களில் முக்கியமானதாக கறுவாப்பட்டை, கராம்பு, மிளகு, ஏலம், சாதிக்காய், சாதிவித்திரி, இஞ்சி, கறித்தூள், மிளகாய்த்தூள் என்பவற்றைக் கூறலாம். இவை முக்கியாக ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## கறுவாப்பட்டை



இது வாசனை கொண்ட ஊசியிலை மரமான Cinnamomum Zeylanicom என்ற மரத்திலிருந்து பட்டை உரிக்கப்பட்டு, வெயிலில் காய வைத்துப் பதப்படுத்தப்படுவதன் மூலம் பெறப்படுகின்றது. உலகில் கறுவாப் பட்டை உற்பத்தியாகும் நாடுகளில் இலங்கையே முதலிடம் வகிக்கின்றது. கூடவே சிச்சிலிஸ், மடகஸ்கர், இந்தியா போன்ற நாடுகளும் கறுவாப்பட்டையை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கின்றன.

## கராம்பு



கராம்பு, 'இலவங்கம்' என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது. கராம்பு மரங்கள் 10-12 அடி உயரம் வரை வளரக்கூடியன. கராம்பு Eugenia Caryuphyllus என்ற மரத்திலிருந்து பெறப்படும் பூத்துக் காய்க்கும் பூவின் திறபடாத மொட்டுப்பகுதியாகும். இலங்கை, இந்தோனேஷியா, தன்சானியா, மடகஸ்கர், பிரேசில், மலேசியா போன்ற நாடுகளில் கராம்பு அதிகளவில் பயிர் செய்யப்படுகின்றது.

## மிளகு



மிளகு இலங்கையில் கண்டி, மாத்தளை, கேகாலை மாவட்டங்களில் அதிகமாகப் பயிர் செய்யப்படுகின்றது. வெள்ளை மிளகு, கறுப்பு மிளகு என்று இரு வகைகள் உண்டு.



இவற்றில் பச்சை நிறமான மிளகிலிருந்து கறுப்பு மிளகும், இளம் சிவப்பு நிற மிளகிலிருந்து வெள்ளை மிளகும் பதனிடப்படுகின்றன.

## ஏலம்



இது Zingiberaceac குடும்பத்தைச் சார்ந்த Elgttaria Cardamom என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. ஏலக்காய் உற்பத்தியில் இந்தியாவே முன்னணி வகிக்கின்றது. அடுத்தபடியாக, இலங்கை, கௌதமாலா, தன்சானியா போன்ற நாடுகளில் ஏலம் விளைகின்றது.

## சாதிக்காய்/ சதிவித்திரி

இது Myristica Fragrance என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. இந்தோனேஷியா சாதிக்காய் உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றது. இலங்கை, கிரனாடா, கௌதமாலா போன்ற நாடுகளிலும் இது பயிரிடப்படுகின்றது.

## இஞ்சி



இஞ்சி வர்த்தகம் மூன்று முறைகளில் நடைபெறுகின்றது. பச்சையாக, Pickle ஆகப் பதப்படுத்தி அல்லது காய வைத்து, காய்ந்த இஞ்சியே வாசனைத் திரவியமாகக் கொள்ளப்படுகின்றது. இது 'சுக்கு'என்ற பெயர் கொண்டும் அழைக்கப்படுகின்றது. பச்சையான இஞ்சி காய்கறியாகவே கணிக்கப்படுகின்றது.


## கறித்தூள்/ மிளகாய்த்தூள்



கறித்தூள், மிளகாய்த்தூள் பொதி செய்யப்பட்டு 25 கி. முதல் 500 கி வரையிலான பொதிகளில் வர்த்தகம் செய்யப்படுகின்றது. கொத்தமல்லித்தூள், சீரகத்தூள் என்பனவும் பொதி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மத்திய கிழக்கு நாடுகள் இவற்றை அதிகமாக இறக்குமதி செய்கின்றன.

**செம்மைத்துளியான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# கல்வியில் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்

கல்வி
முகாமைத்துவம் - 31

## கற்றலுக்கான ஆலோசனைகள்

வழிகாட்டுதலும் ஆலோசனை கூறுதலும் வாழ்வைத் திருப்திகரமாக மேற்கொள்ள அத்தியாவசியப்படும் பிரதான அம்சங்களாகும். 'மெதுசன்' என்பவர் வழிகாட்டுதல் பற்றிக் கூறும்போது: "வழிகாட்டல் என்றால், கல்வியின் மூலம் முறைப்படியான சிறந்த விளக்கங்களைக் கொடுப்பதனூடாக, சமூக ரீதியான தேவைகளையும் சந்தர்ப்பங்களையும் உரிய முறையில் பயன்படுத்துவதற்காக, தமது இறைமைகளையும் ஆற்றல்களையும் பயன்படுத்தி சிறந்த விளக்கத்துடன் பயன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு, தொழில் ரீதியாக ஒருவர் செயற்பட்டு முன்னேற உதவுவதே வழிப்படுத்தலாகும்" என்கின்றார்.

'ஜோன்ஸ்' என்பவர் இதுபற்றிக் கூறுகையில்; "ஒருவர் இன்னொருவருக்கு வழங்கும் தனிப்பட்ட உதவியே வழிகாட்டலாகும்" என்றார். "தவிர, உதவி பெறுபவர் என்ன செய்ய வேண்டும்?, எவ்வாறு கருமமாற்ற வேண்டும்?, எவ்வாறு அவரது நோக்கங்களை அவர் பூர்த்தியாக்க வேண்டும்?, அவருக்கு ஏற்படும் பிரச்சினைகளை அவர் எவ்வாறு சமாளிக்க வேண்டும்? போன்ற விடயங்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஆலோசனை வழங்கி உதவுவதே ஆலோசனை வழங்குவதாகும்" என்கின்றார்.

இங்கு வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் என்பனவற்றின் செயற்பாடுகள் 3 வகைப்படுகின்றன.

1. சரிப்படுத்தக்கூடிய செயற்பாடுகள்.
2. மாறுபட்ட சூழ்நிலைக்குத் தக்கபடி மாற்றியமைக்கும் செயற்பாடுகள்.
3. அபிவிருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகள்.

### 1. சரிப்படுத்தக்கூடிய செயற்பாடுகள்:

உரிய சூழ்நிலைக்கேற்ப, சிறப்பாகச் செயற்படுத்தக்கூடிய வகையில் கல்வி நிலையங்களில் அல்லது தொழில் புரியும் இடத்தில் அல்லது வீட்டில் அல்லது சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய முறையில் மாணவர்களின் செயற்பாடுகளைச் சீர்படுத்தி விடல்.

### 2. மாறுபட்ட சூழ்நிலைக்குத் தக்கபடி மாற்றியமைக்கும் செயற்பாடுகள்:

மாணவர்களது எதிர்காலத் தொழிலுக்கு அவர்களை ஆயத்தப்படுத்தும் வகையில் திட்டமிட்டுக் கல்வித் திறனை ஒழுங்குபடுத்தி, நீண்ட காலத்திட்டத்தின் அடிப்படையில் தங்களின் நோக்கத்தை அடையும் வகையில் மாணவர்களுக்கு சிந்தனைத் தெளிவை ஏற்படுத்தல் என்பதை இந்த செயற்பாடு குறிக்கும். இங்கு தொழில் ரீதியான சூழ்நிலையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக்கூடியதாகவும் கல்வி முயற்சியின் பின்னர் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதமாகவும் கல்வி பயிலும் காலத்தில் தொழிற்றுறை விருத்திக்கு உதவக் கூடியதாகவும் இருக்கும் வகையில் வழிகாட்டல் அமைந்திருப்பது அவசியமாகும்.

### 3. அபிவிருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகள்:




பிரச்சினை ஏற்பட்டு அதன் மூலம் உண்டான சீரழிவும் அதனைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளும் முயற்சிகளும் தாமதமின்றிச் செயற்படுத்தப்பட வேண்டும். தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருப்பின், மாணவர்களிடையே அதனாலான பாதிப்புநிலை அதிகரிக்கும். அத்துடன், மாணவர்களின் வளர்ச்சியையும் அது பாதிக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. அப்போது, சமூக முன்னேற்றமும் தேசத்தின் முன்னேற்றமும் மேற்படி ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் மூலமாகத் துரிதமடையும். (தொடரும்)



**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



அநுராதபுரம், அழுத்கம தாருஸ்ஸலாம் மு.வித்தியாலயத்தைச் சேர்ந்த பாத்திமா அஸ்னா, 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பளீல் முஹம்மட்-பாத்திமா ஆகியோரின் புதல்வியாவார்.



இரத்தினபுரி பர்குசன் உயர் தரப் பாடசாலை தமிழ்ப்பிரிவு மாணவி ஏ.துஷாந்தனி, 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அரியராஜா-சுமதி தம்பதியரின் புதல்வியாவார்.



யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையைச் சேர்ந்த சி.வசீகன், 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சிவசக்திநாதன்-மல்லிகாதேவி ஆகியோரின் புதல்வராவார்.



இரத்தினபுரி பர்குசன் உயர் தரப் பாடசாலை தமிழ்ப் பிரிவைச் சேர்ந்த ஜெரோம் துஷான், 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரோய்-மலர் தம்பதியரின் புதல்வராவார்.



வரக்காபொள பாபுள் ஹஸன் மத்.கல்லூரியில் கல்வி பயிலும் அஸ்ரின் நஜா, 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



நாத்தாண்டியா, தும்மோதர மு.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எஃப்.ஸஹ்ரினா, 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஹம்ஸா-ஹானிம் ஆகியோரின் புதல்வியாவார்.



குளி/திவுறும்பொல காஸிம் மு.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பஸ்லா, 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பௌஜர்-ருஸ்னா தம்பதியரின் புதல்வியாவார்.



களு/ஹொரேதுடுவை மு.வித்தியாலயத்தைச் சேர்ந்த செய்னம்பு ஆயிஷா, 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் முயீஸ், பர்சானா தம்பதியரின் புதல்வி ஆவார்.



குளி/திவுறும்பொல காஸிம் மு.வித்தியாலய மாணவியான மப்ரா, 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மரூட்-மர்லியா தம்பதியரின் புதல்வியாவார்.



யா/துணவி அமெரிக்கன் மிஷன் த.க.பாடசாலையில் கல்வி கற்கும் பி.எஜிந்தன், 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வ/தவசியாகுளம் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் ம.கிஷாந்தினி, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மங்களேஸ்வரன்-தமிழினி தம்பதியரின் புதல்வியாவார்.



இப்/மடிகே மு.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எம்.மனாஸ், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மசாஹிம்-பருசா தம்பதியரின் புதல்வராவார்.



இரத்தினபுரி பர்குசன் உயர் தரப் பாடசாலை தமிழ்ப்பிரிவு மாணவன் எஸ்.ரிதுர்ஷன், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சண்முகராஜா-நவஜோதி தம்பதியரின் புதல்வராவார்.



வெல்பொத்துவெவ மு.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எம்.அர்ஷாட், 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சனூர்தீன்-பரினோனா தம்பதியரின் புதல்வராவார்.



கொழும்பு-04, இந்துக் கல்லூரியிலிருந்து 47 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் சண்முகம் ராஜகோபால் (183 புள்ளிகள்), சுகைப் சுரைவ் (178 புள்ளிகள்), வி.விருத்ஷான் (176 புள்ளிகள்) ஆகியோர் கொழும்பு மாவட்டம் தமிழ் மொழிமூலத்தில் முறையே முதலாம், மூன்றாம், ஐந்தாம் இடங்களைப் பெற்றுள்ளனர். சித்தியடைந்த மாணவர்கள் தமது கல்லூரி அதிபர் த.முத்துக்குமாரசுவாமி, ஆரம்பப்பிரிவு அதிபர் நளாயினி ஓர்லோவ், தரம் 5 பகுதித் தலைவர் பி.சிவலிங்கம் மற்றும் ஆசிரியர்களான வி.விக்கினேஸ்வரன், இ.வல்லிபுரம், எச்.சிவகிரி, கே.சுதர்சன், சி.சிவக்குமார் ஆகியோருடன் நிற்பதையும் கொழும்பு மாவட்டம் தமிழ் மொழிமூலத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவன் சண்முகம் ராஜகோபாலை கட்டமிடப்பட்ட படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவை பழுத
# பாதுகாக்கும்

உணவு அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாகும். ஆரம்ப காலங்களில் கற்கால மனிதன் மிருகங்களை வேட்டையாடியும் பின்னர் இடைக்காலத்தில் பயிர்ச்செய்கை மூலமும் தனது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்துவந்துள்ளான். அத்துடன், தனது உணவுத் தேவைக்காக கால்நடைகளையும் வளர்க்க ஆரம்பித்தான். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் கிடைக்கும் அளவுக்கதிகமான உணவுகளை பின்னைய காலத் தேவைக்காக சேமித்து அதனைப் பாதுகாக்கும் தேவை ஏற்பட்டது. இவ்வாறு சேமித்துப் பாதுகாக்கப்பட்ட உணவு அடைமழை காலங்களில் அவனின் உணவுத்தேவைகளை நிறைவு செய்யப் பெரிதும் உதவின. ஆரம்பகாலத்தில் இவ்வாறு சேமித்துப் பாதுகாக்கப்பட்ட உணவு பிற்காலத்தில் பெரியளவில் உணவுப் பாதுகாப்பு கைத்தொழிலாக வளர்ச்சியடைந்தது.

## உணவு பாதுகாப்பு என்றால்....

உணவின் பௌதீக, உயிரியல் நிலையில் (சுவை, தன்மை, நிறம், மணம், தோற்றம்) மாற்றம் எதுவும் ஏற்படாமல் பாதுகாப்பது 'உணவுப் பாதுகாப்பு' எனப்படும். அதுவே, உணவு வகைகளைப் பழுதடையாமல் நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்கும் வழிமுறையாகும். பண்டைய காலம் முதல் எமது மூதாதையர்கள் உணவைப் பாதுகாப்பதற்குப் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர். ஆனால், இன்று தொழில்நுட்பத்தின் உதவியுடன் மிக இலகுவாக உணவுகளைப் பாதுகாக்கக்கூடியதாக உள்ளது.

## உணவுப் பாதுகாப்பின் அடிப்படை

உணவு பழுதடைவதற்கு முக்கிய காரணம் பக்றீரியாக்கள், வைரஸ்கள் போன்ற கிருமிகளின் தொழிற்பாடாகும். அதனால், உணவைப் பாதுகாப்பதற்காக பின்பற்றப்படும் முறைகள் பின்வரும் அடிப்படைத் தத்துவத்தில் அமைகின்றன.

* உணவைப் பழுதடையச் செய்யும் நுண்ணுயிர்கள் உணவில் சேராமல் தடுத்தல்.
* உணவில் உள்ள கிருமிகளின் செயற்பாட்டையும் வளர்ச்சியையும் தடுத்தல்.
* உணவில் காணப்படும் கிருமிகளை நீக்குதல் அல்லது அழித்தல்.

## உலர விடுதல்



உணவை பாதுகாக்கும் முறையில் சம்பிரதாயபூர்வமான முறையே உலர விடுதல் ஆகும். ஆரம்பகால மனிதன் பழவகைகள், மரக்கறி வகைகள், மாமிசங்கள் என்பவற்றை சூரியஒளியில் காயவைத்து உணவைப் பாதுகாக்கும் முறையைக் கையாண்டான். இவ்வாறு உணவு வகைகளை உலர விடுவதன்மூலம் அவற்றில் கிருமிகள் உருவாவதற்கு காரணமாக அமையும் நீர் அற்றுப்போகும் நிலை ஏற்பட்டது. அன்றாடம் பயன்படுத்தப்படும் அதிகமான உணவு வகைகள் இவ்வாறு உலர விடும் முறை மூலம் பாதுகாக்கப்பட்டன.

## உப்பிட்டு உலரவிடுதல்



உணவு வகையில் உள்ள நீரை மிக வேகமாக அப்புறப்படுத்தல் என்பது உணவைப் பாதுகாக்கும் மரபு ரீதியான வழிமுறையாகும். இவ்வாறு உணவு வகைகளில் உப்பிடும்போது விரைவாக அவற்றிலுள்ள நீர் வெளியேற்றம் நடைபெறுகின்றது. வெயிலில் வைக்கும்போது அது விரைவில் காய்ந்து உலர்ந்து விடுகின்றது. இதன்மூலம் உணவு வகையில் கிருமிகள் உருவாவதும் கட்டுப்படுத்தப்படுகின்றது. உப்பிட்டு நன்கு உலர்த்தப்பட்ட உணவு வகைகள் காற்றுப் புகாமலும் ஈரலிப்பு ஏற்படாமலும் பாதுகாக்கப்படுகின்றன.

## புகையூட்டுதல்



உணவு வகைக்கு புகையூட்டி சூடேற்றுதல் இன்னுமொரு பாதுகாப்பு வழிமுறையாகும். பண்டைய காலங்களில் வீடுகளில் அடுக்களைக்கு மேலாக 'துமுடு' எனப்படும் புகைமேடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. உணவு வகைகளை இதில் பரப்பி கீழே அடுப்பில் இருந்து வெளியேறும் புகையின்மூலம் உணவு வகைகள் பாதுகாக்கப்பட்டன.

## தேன் கலந்து வைத்தல்



ஆதிவாசிகள் உணவு வகைகளைப் பழுதடையாது பாதுகாப்பதற்காக தேன் கலக்கும் முறையொன்றைப் பின்பற்றுகின்றனர். தேவைக்கு மேலதிகமாக உள்ள இறைச்சி வகைகளை தேனில் கலந்து பதப்படுத்தி வைப்பர். தேனிலும் சீனியிலும் நீரை உறிஞ்சும் தன்மை அதிகமாக இருப்பதால் உணவு வகையில் உள்ள நீர் உறிஞ்சப்பட்டு அங்கு கிருமிகள் உருவாதல் கட்டுப்படுத்தப்படுகின்றது.

## நிலத்தில் அல்லது மணலில் புதைத்து வைத்தல்



உலர்ந்த மணலில் உணவு வகைகளைப் புதைத்து வைக்கும் முறையின் மூலமும் உணவு வகைகள் பாதுகாக்கப்பட்டன. காற்றுப் புகாமல் இருப்பதற்காகவே இம்முறை கையாளப்பட்டது. இம்முறையால் இவ்வகை உணவு வகையில் உள்ள நீர் ஆவியாதல் தடுக்கப்படுவதோடு, இவை பழுதடையும் தன்மையும் கட்டுப்படுத்தப்பட்டது. இஞ்சியும் இவ்வாறு மண்சட்டியில் புதைத்து வைத்துப் பாதுகாக்கப்படுவதுண்டு.

## கிடைக்கும் நன்மைகளாவன

உணவின் அசல் தன்மை கெடாது பாதுகாத்துக் கொள்ளல், உணவு விஷத்தன்மையடைதல் அல்லது பழுதடைவதில் இருந்து பாதுகாத்துக் கொள்ளல், மேலதிக உணவுகள் தேவைப்படும்போது பயன்படுத்தக்கூடியதாக இருத்தல், உணவுப் பற்றாக்குறை ஏற்படும்போது பயன்படுத்தல், உணவு வகைகள் வீண் விரயமாவதைத் தடுத்தல் என்பன இதன் மூலம் கிடைக்கும் நன்மைகளாகும்.





## நவீன முறை

தற்போது உணவு வகைகளைப் பழுதடையாமல் பாதுகாப்பதில் புதிய தொழில்நுட்பமும் தொழில்நுட்ப



உபகரணங்களும் இணைந்துள்ளன. இதனால் பெரியளவில் உணவு வகைகளைப் பாதுகாக்க முடிகின்றது. இதனால் பக்றீரியாக்கள், வைரஸ்கள் அழிக்கப்படுவதோடு, அவற்றின் உருவாக்கமும் கட்டுப்படுத்தப்பட்டு உணவு வகைகள் பாதுகாக்கப்படுகின்றன.

## 'பஸ்டர்' வழிமுறை (Pasteurization)



உணவு வகைகளை 100 செல்சியஸ் உஷ்ணத்துக்குக் குறைவான நிலையில் சூடேற்றுவது 'பஸ்டர்' முறையாகும். 71.5°-15 செக்கன்கள் அல்லது 63°-30 நிமிடங்கள் அளவில் சூடாக்கும்போது, உணவு பஸ்டர் மயப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றது. இந்தமுறையால் உணவில் உள்ள நுண்ணுயிர்கள் முழுமையாக அழிந்து விடுவதில்லை. இவ்வாறு பஸ்டர் மயப்படுத்தப்பட்ட உணவு வகைகள் நீண்டகாலப் பாவனைக்காக 'டின்னில்' அடைக்கப்படுகின்றது. பால் பஸ்டர் மயப்படுத்தப்பட்டதால் குளிரூட்டப்பட்டே பாதுகாக்கப்படுகின்றது.

## உயிரியல் முறை (Steralization)



உணவு வகைகளைப் பழுதடையச் செய்யும் நுண்ணுயிர்களை முழுமையாக அழித்து விடுவதே இம்முறையாகும். உணவு வகைகளை 121° செல்சியஸில் 15 நிமிடங்கள் அளவில் சூடேற்றும்போது, இந்த உயிரியல் தொழில்பாட்டு முறைக்கு உள்ளாக்கப்படுகின்றது. அதன்பின்னர், அந்த உணவு வகைகளை டின்னிலும் போத்தலிலும் அடைத்து நீண்டகாலம் பாதுகாக்க முடியும். எனினும், இந்தவகை உணவுகளின் சுவையில் அல்லது போஷாக்கில் எதுவித மாற்றமும் நிகழாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டையாமல்

# முறைகள்





## கதிர் தாக்கத்திலிருந்து பாதுகாத்தல்



கதிர் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட உணவு வகைகளில் இத்தகைய குறியீடு பொறிக்கப்பட்டிருக்கும். கதிர்த் தாக்கம் (Ultra Violet ray) எல்பா, கெமா அல்லது எக்ஸ் கதிர்கள் சிற்றலை (Micro Waves) போன்ற தாக்கங்களில் இருந்து உணவு வகைகளைப் பாதுகாத்துக் கொண்டால் அவற்றைப் பழுதடையாது பாதுகாக்கலாம். ஆனாலும், சிலவகையான கதிர்களைச் செலுத்துவதன் மூலம் உணவு வகையில் உள்ள கிருமிகளை அழித்து உணவு வகைகளை நீண்ட காலத் தேவைக்காக பாதுகாக்க முடியும். ஆனாலும், அவை சில நேரங்களில் முழுமையாக வேறு தாக்கம் புரிதல் ஊடாக, பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். இதனால், இத்தகைய கதிர் தாக்கங்களில் இருந்து உணவு வகைகளைப் பாதுகாப்பது தொடர்பாகவும் நாம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற உணவு வகை தொடர்பாகவும் மேற்படி குறியீடு இருக்கின்றதா? என்பதையும் அவதானித்து வாங்குதல் முக்கியமானதாகும்.

## ஒட்சிசன் வாயுவுடன் தாக்கம் புரிவதைத் தடுத்தல்



உணவில் ஒட்சிசன் வாயு தாக்கம் புரிவதால் ஏற்படும் ரசாயன மாற்றம் காரணமாக, சில நுண்ணுயிர் வகைகளுக்கு விரைவான அழிவு ஏற்பட்டு உணவு வகைகள் பழுதடைவதுண்டு. அதனால், உணவு வகைகள் பழுதடையாமல் பாதுகாப்பதில் ஒட்சிசனுடன் தாக்கம் புரிவது தடுக்கப்படல் வேண்டும். இதன் காரணமாக, உணவு வகைகளை டின்னிலும் மற்றும் கொள்கலன்களிலும் அடைக்கும்போது ஒட்சிசன் வாயு வெளியேற்றப்பட்டு உணவுகளுடன் தாக்கம் புரியாத நைதரசன் வாயு நிரப்பப்படும். இதன் மூலம் மாற்றுத் தொழிற்பாடு தவிர்க்கப்படுவதோடு, தேவையான கலவைகள் மற்றும் சேர்வைகளுடன் நிகழும் தாக்கம் தவிர்க்கப்படுகின்றது.




* பழச்சாறு வகை உற்பத்தி, டின்னில் அடைக்கப்படும் உணவு உற்பத்தி வகைகளில் ஒட்சிசன் வாயு நீக்கப்படும்.
* பெக்கட்டுக்களில் அடைக்கப்படும் உணவு வகைகள் வாயுக்கள் அனைத்தும் வெளியேற்றப்பட்டு தாக்கம் புரியாத நிலை அதாவது, Vaccum Packaging ஏற்படுத்தப்பட்டே அடைக்கப்படுகின்றது.
* ஒட்சிசனை உறிஞ்சும் ரசாயனப் பதார்த்தங்களை உட்புகுத்தல்.
* உணவில் உள்ள வாயுக்களுடன் தாக்கம் புரியாத வாயுக்களை உள்ளடக்குதல்.

## உணவு வகை பிரகாசத்துடன் (ஒளி) தாக்கம் புரிவதைத் தடுத்தல்

உணவு வகைகளைப் பாதுகாக்கும்போது, அதில் உள்ள போஷாக்கு மற்றும் நிறங்களில் மாற்றம் ஏற்படாது பாதுகாத்தல்




முக்கியமானதாகும். அதனால், சில வகையான உணவு வகைகள் அதிக பிரகாசமுள்ள ஒளிபடும்போது அதனோடு தாக்கம் புரிகின்ற நிலை ஏற்படுவதால் ஒளி உறிஞ்சப்படாத பைகளில் அல்லது பெக்கட்டுகளில் அடைக்கப்படுகின்றன. இதனாலேயே பால் மாவை பெக்கட்டில் அடைக்கும்போது, பல படிமுறைகள் (அலுமினியம் பூசப்பட்ட) கொண்ட உறைகளில் பொதி செய்யப்படுகின்றது.

## குறைந்த உஷ்ண நிலையில் கிருமிகள் வளர்வதைக் கட்டுப்படுத்தல்



குளிரூட்டுவதன் மூலம் அல்லது உச்சநிலையில் குளிரூட்டுவதன் மூலம் உணவு வகைகளில் உள்ள பாதிப்பை ஏற்படுத்தும் கிருமிகளின் பரம்பலைக் கட்டுப்படுத்தும் முறை இதுவாகும். குளிர்சாதனப் பெட்டியில் $1^{0}$-$8^{0}$ வரை உஷ்ண நிலை இருக்கின்றது. இந்த நிலையில் கிருமிகள் அழிந்து விடுகின்றன. மரக்கறி வகைகள், பழங்கள், பெக்கட்டில் அடைக்கப்பட்ட பால் வகைகள், யோகட் என்பனவற்றை குளிரூட்டுவதன் மூலம் சிறிது காலத்திற்கு பழுதடையாது பாதுகாக்கலாம். ஆனாலும் அவை மெதுவாகப் பழுதடையலாம். இதன் காரணமாக, குளிரூட்டப்பட்ட உணவு வகைகள் காலாவதியாகும் காலம் குறைவாகவே இருக்கின்றது. குறைந்தளவான உஷ்ண நிலையில் வளர்ச்சியடையும் கிருமிகள் பெருகிக்கொண்டிருப்பதால் உச்ச நிலையில் குளிரூட்டப்பட்ட உணவு வகையானாலும் அவற்றைக் குளிரூட்டியில் இருந்து வெளியே எடுத்தவுடன் சமைக்க (சூடாக்க) வேண்டும்.

## உணவில் உள்ள நீரின் அளவைக் குறைத்தல்



உணவின் மேற்பரப்பில் கிருமிகள் உருவாகித் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக உள்ள நீரின் அளவைக் குறைப்பது இத்தொழிற்பாடாகும். மரபு ரீதியிலும் நவீன முறையிலும் உணவு வகைகளைப் பாதுகாக்கும் பல வழிகளில் இம்முறை கையாளப்படுகின்றது.

## அதிகளவில் குளிரூட்டல்



சில வகையான மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகள் அதிகளவில் குளிரூட்டப்படும். இதன் மூலம் அவற்றில் உள்ள நீரின் அளவு குறைக்கப்படுகின்றது.

## அதிக சீனி கலத்தல்



தேன் கலந்து உணவு வகைகளைப் பாதுகாத்தல், சர்க்கரை தடவுதல் மற்றும் பாணியை சூடேற்றுதல் மூலம் இறுக்கமாக்குதல் என்பன மரபு ரீதியான முறைகளாகும். கோடியல், சோஸ், பழவகைகளின் சாறு, பழ ஜேம், சட்னி என்பனவும் இதில் அடங்கும். சட்னி தயாரிப்பில் 50%-75% அளவில் சீனி சேர்க்கப்படும். இதன் மூலம் உணவு வகைகளில் உள்ள நுண்ணுயிரிகள் அற்றுப்போய் உணவு பழுதடையாமல் பாதுகாக்கப்படுகின்றது.

## உலர விடுதல்



ஈரப்பலா, பலா, கருவாடு, காளான் ஆகியவற்றை சூரிய ஒளியில் உலர விடுவதே இம்முறையாகும். இவ்வாறான உணவு வகைகளை உலர விடுவதன் முன்னர் சுடுநீரில் இட்டு நுண்ணுயிர்களை அழித்தல் மேற்கொள்ளப்படும். அடுகோஷி என்ற பலாச்சுளையை உலர விடுதல் இம்முறையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

## சுடுநீரில் இடல் (Blanching)



உணவுப் பொருட்களைப் பழுதடையச் செய்யும் (மரக்கறி, பழவகை) இயற்கையாக உள்ள 'என்சய்மை' இல்லாமல் செய்யவே இம்முறை பின்பற்றப்படுகிறது. $90^{0}$ செல்சியஸ் நிலையில் உள்ள கொதி நீரில் 2-3 நிமிடங்கள் வரையில் இடுதல் இம்முறையாகும். இந்தமுறையின் மூலம் சில வகையான கிருமிகள் அழிந்து விடும். உணவு வகைகள் உலர்வதற்கு (காய்வதற்கு) இம்முறை பின்பற்றப்படும்.

## உயிரணுக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தல்



மரக்கறி வகைகள், பால் மற்றும் பழவகைகளில் நீர்த்தன்மையைக் குறைக்கச் செய்து Ph மதிப்பைக் குறைத்து உயிரணுக்கள் வளர்வதைக் கட்டுப்படுத்தும்போது, நீண்ட நாட்களுக்கு பழுதடையாது பாதுகாக்க முடிகின்றது. யோகட் மற்றும் தயிர் போன்றவற்றில் கிருமித்தாக்கம் ஏற்படலாம். 'லக்டிக்' அமிலம் ஏற்படுதலின் விளைவே இதுவாகும். அதன்போது, பால்வகைகள் பழுதடைவதற்கு காரணமாகும் நுண்ணுயிர் கிருமிகளின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும். 'வினாகிரி' போன்ற அமில சேர்வைகளின் மூலம் பழவகைகள், மரக்கறிகள் என்பனவற்றை நீண்ட காலம் பாதுகாத்து வைக்க முடியும்.

## உணவில் உள்ள கிருமிகள் மற்றும் 'என்சய்ம்' அழித்தல்

உணவு வகைகளுடன் சேர்ப்பதற்காக அனுமதிக்கப்பட்ட ரசாயனப் பதார்த்தங்களைக்கொண்டு தற்காலத்தில் உணவுவகைகள்



பழுதடையாது பாதுகாக்கும் தொழில்நுட்ப வளர்ச்சி முக்கிய பாதுகாப்பு முறையாகும். அத்துடன், புகையூட்டுவதன் மூலம் புகையில் உள்ள ரசாயனப் பதார்த்தங்கள் உணவைப் பாதிக்கும் நுண்ணுயிரிகளை அழித்து விடுவதால் உணவு வகைகள் பாதுகாக்கப்படுகின்றன.

அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Thaba Bosiu மேட்டுநிலம்

Maletsunyane நீர்வீழ்ச்சி


காட்சே ஏரியை அண்டிய மேட்டுநிலங்கள்

# லெசோதோ


தலைநகரின் தோற்றம்

**அரசு:** நாடாளுமன்ற நடைமுறை மற்றும் வரம்புடைய முடியரசு.

**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து 1966, ஒக்டோபர் 4 ஆம் திகதி.

**தேசிய பெயர்:** மூசோ ஒ லெசோதோ (Kingdom of Lesotho)

**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய ஒக்டோபர் 4.

**மன்னர்** (1996): மன்னர் மூன்றாம் லெட்சீ.

**பிரதமர்** (1998): பகலிதா மொசிசிலி.

## புவியியல்


மன்னர்

நாற்புறமும் நிலப்பரப்பால் சூழப்பட்ட ஓர் ஆபிரிக்க நாடாகும். இது முழுமையாக தென் ஆபிரிக்க குடியரசால் சூழப்பட்டுள்ளது. உலகில் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள ஒரே ஒரு சுதந்திர நாடு லெசோதோவாகும். நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 80% இற்கும் அதிகமான இடங்கள் ஏறக்குறைய 1,800 மீற்றர் உயரமாகும். நாட்டின் மத்திய, கிழக்கு மற்றும் வடக்குப் பிரதேசங்கள் முழுவதும் மலைத்தொடர்களும் மேட்டுநிலங்களும் நிறைந்து காணப்படுகின்றன. கெலென்டன், மாக்ஹலெலெங், மாலிபாமட்சோ, மட்சோக்கு மற்றும் ஒரேஞ்ச் ஆகியன நாட்டை ஊடறுத்துப் பாயும் முக்கிய நதிகளாகும்.

**மொத்தப் பரப்பு:** 11,718 சதுர மைல் (30,350 ச.கி.மீ)

**தலைநகரமும் பெரிய நகரமும்:** மஸேரு.

**உயர் மலைச்சிகரம்:** தபானா நிட்லென்யானா (5199 மீற்றர்);

**தாழ் மையம்:** ஒரேன்ஜ் மற்றும் மாக்ஹலெலெங் ஆகிய நதிகள்.

**மக்கள் தொகை** (2010): 1,919,552.

**நாணயம்:** மலூட்டி.

**மொழிகள்:** ஆங்கிலம் மற்றும் செசோத்தோ இரண்டும் உத்தியோகபூர்வ மொழிகள், சூலு, ஸோஸா.

**இனக்குழுக்கள்:** சோத்தோ 99.7%, ஐரோப்பியர்; ஆசியர் மற்றும் ஏனையோர் 0.3%.

**சமயங்கள்:** கிறிஸ்தவம் 80%, உள்ளூர் மத நம்பிக்கைகள் 20%.

**எழுத்தறிவு** (2003): 85%.

**இணையத்தளக் குறியீடு:** .ls

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +266.

**தேசிய கீதம்**

Lesotho fatse la bo ntat'a rona;
Ha ra mafatse le letle-ke lona;
Ke moo re hlahileng,
ke moo re holileng ......என ஆரம்பமாகின்றது.

## வரலாறு


பிரதமர்

முன்பு 'பசுட்டோலேண்ட்' என அழைக்கப்பட்ட லெசோதோ, 1843 இல் உள்ளூர் தலைமையாளரான மொஷுஷு என்பவரிடமிருந்து ஒப்பந்தப்படி பிரித்தானிய ஆட்சியாளரிடம் கையளிக்கப்பட்டது. 1871 இல் கேப் குடியேற்றத்துடன் இணைக்கப்பட்டது. எனினும், இந்த இணைப்பு 1884 இல் ரத்துச் செய்யப்பட்டு பிரித்தானியாவின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது. பின்னர் 1966 ஒக்டோபர் 4 ஆம் திகதி பசுட்டோலேண்ட் காலனியானது சுதந்திரமடைந்து இரண்டாம் மொஷுஷு அதன் அரசனானார். 1970 ஆம் ஆண்டின் பின்னர் அப்போதைய பிரதமர் லீபுவா ஜோனத்தான் அவசரகால சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, அரசியலமைப்பை இடைநிறுத்தியதை அடுத்து மொஷுஷு மன்னரின் அதிகாரம் செல்லுபடியற்றதானது. தொடர்ந்து பலமுறை ராணுவப் புரட்சிகள் ஏற்பட்டு ராணுவ ஆட்சி நடைபெற்றது. 1995 ஜனவரியில் இரண்டாம் மொஷுஷு மன்னர் பதவிக்கு வந்தார். 1996 இல் அவரது இறப்பினை அடுத்து மன்னர் லெட்சீ பதவியை ஏற்றார். பின்னர் 1998 தேர்தல் நடத்தப்பட்டு மொசிசிலி பிரதமராக பதவியேற்றார்.






## காலநிலை

லெசோதோவின் காலநிலையும் ஏனைய ஆபிரிக்க நாடுகளைப் போன்றே வெப்பமானதாகும். ஒக்டோபர் முதல் ஏப்ரல் மாதம் வரை கோடை காலமாகும். மே முதல் செப்டெம்பர் வரை மாரி காலமாகும்.


தேசிய இலச்சினை

## கலாசாரம்

ஓரிரு ஆபிரிக்க இனக்குழுக்களை மாத்திரம்கொண்ட இந்நாட்டில் வாழும் மக்கள், தமக்கிடையே பாரம்பரிய மரபுகளையும் சட்டதிட்டங்களையும் பண்பாட்டையும் பெருமளவில் கடைப்பிடிப்பதைக் காணலாம். கிராமங்கள் அனைத்தும் முறையான வாழ்க்கை ஒழுங்கமைப்பைக் கொண்டதாகவும் ஒவ்வொரு கிராமமும் ஒரு கிராமத் தலைவரின்கீழ் இயங்குவதையும் காணலாம். இம்மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகளாவர். அவர்களின் சமூகத்தில் மிருகங்கள் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன.


பசோதோ தொப்பிக் கடை


லெசோதோ பாரம்பரிய வீடுகள்

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2000): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் 22,200; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 21,600.

**வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 1, FM 2, SW 1.

**தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2000): 1.

**இணையத்தள வழங்குனர்கள்** (2000): 1; இணையத்தளப் பாவனையாளர்கள்: 5,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (1995): மொத்தம் 2.6 கி.மீ. **பெருந்தெருக்கள்** (1999): மொத்தம் 5,940 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை: 1,087 கி.மீற்றர்; செப்பனிடப்படாதவை 4,853 கி.மீற்றர்). **விமான நிலையங்கள்** (2002): 28.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 11%): தானிய வகைகள், கால்நடைகள். **தொழிலாளர்கள்** (2002): 86%. **வேலையற்றோர்** (2002): 45%. **கைத்தொழில்கள்:** உணவுற்பத்திப் பொருட்கள், பான வகைகள், புடவை, கைப்பணிப் பொருட்கள், உல்லாசப் பயணத்துறை. **இயற்கை வளங்கள்:** நீர், புல்வெளிகள் (மேய்ச்சல் நிலம்), வைரம், மணல், களிமண். **ஏற்றுமதிகள்** (2009): புடவை வகைகள், பாதணிகள், வாகனங்கள், கம்பளி, உணவும் உயிருள்ள மிருகங்களும். **இறக்குமதிகள்** (2009): உணவு, கட்டடப் பொருட்கள், வாகனங்கள், இயந்திரங்கள், மருத்துவப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐக்கிய அமெரிக்கா, கெனடா, ஐக்கிய ராச்சியம், ஹொங்கொங், சீனா, இந்தியா, தென்கொரியா, ஜேர்மனி.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✦ காட்சே ஏரி ✦ பூதா-பூதே நகர் ✦ Hlotse குதிரைச் சவாரி ✦ பசோதோ தொப்பிக் கடை ✦ Maletsunyane நீர்வீழ்ச்சி ✦ மொரிஜா நகர் ✦ Thaba Bosiu மேட்டுநிலம் ✦ Sehlabathebe தேசிய வனவிலங்கியல் பூங்கா.


ஒரேன்ஜ் நதி


காட்சே ஏரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரொபோ மனிதனை' உருவாக்கியுள்ள இலங்கை இளம் விஞ்ஞானி





மன்னார் மாவட்டத்தில் இளம் விஞ்ஞானியொருவர் தன் சுய முயற்சியினால் இயந்திர மனிதன் (Robot) ஒன்றை உருவாக்கி சாதனை புரிந்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் இலை மறை கால் போல் இருந்து தற்போது உலகிற்கு வெளிப்பட்டிருக்கும் இவரின் பெயர் செபதேயுலெபோன் என்பதாகும். இவர் விடத்தல் தீவுக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறு வயதிலேயே தந்தையை இழந்தவர். ஏழைக்குடும்பத்தில் பிறந்த இவர் கடந்த எட்டு வருடங்களாக பற்பல சாதனைகளை நிலைநாட்டி வந்துள்ளார். அதற்கான ஆதாரங்கள் மன்னார் பிரதேசத்தில் எழுத்தூர் கிராமத்தில் அவருடைய உருவாக்கலின்கீழ் செயற்பட்டு வரும் 'லெப்டிறோ' ஆய்வுகூடத்தில் (Lepdiro Innovating Lab) வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மன்னார் பிரதேசத்தில் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்று பின்னர் தொழில்நுட்பக் கல்லூரியில் திறம்படக் கற்று, இலத்திரனியல், மின்சாரவியல் போன்றவற்றில் போதனாசிரியராகவும் பணிபுரிந்தார். இவர் கற்ற, பயிற்றுவித்த தொழில்நுட்பக் கல்வியின் நுணுக்கங்களே, இவரை மிகவும் வியத்தகு செயல்களைப் புரிவதற்குத் தூண்டின. அத்துடன், நேர முகாமைத்துவமும் அவரைத் தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றமடையச் செய்தது எனலாம்.

அவருடைய இரண்டு வருடகாலஉழைப்பின் மூலம் உருவாக்கம் பெற்ற 'டிறோபொட்' (Diropot) எனும் இயந்திர மனிதனின் உருவாக்கமானது, மன்னார் மாவட்டத்தின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதோடு, இலங்கையில் தனிநபர் ஒருவரின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இயந்திர மனிதன் என்ற பெயரையும் பெற்றுள்ளது. மென்பொருள் மூலம் மட்டுமல்லாது மின்னியலிலும் (Electronic) அதற்குரிய வழிப்படுத்தலை இவர் மேற்கொண்டுள்ளார். இதனை இயக்குவதற்குரிய மூளையை (Memory Chip) இணை இயந்திரங்களின் தொழில்நுட்பங்களின்றி மின்னியல் முறையிலேயே வடிவமைத்துள்ளார்.

இதில் விசேட அம்சம் என்னவெனில் மின்சாரத்தில் இயக்கப்படும் கட்டுப்பாட்டுக்கருவி (Remote Control) இல்லாத பொருட்களையும் இதிலுள்ள செருகியில் (plug) இணைத்துவிட்டால் போதும்; Diropot என அழைக்கப்படும் இந்த இயந்திர மனிதன் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளும் திறனுடையது. 38kg நிறை உடைய இந்த Diropot எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி அறிமுகப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கொடுக்கப்படும் சிறிய வேலைகளைக் கூட, திறம்படச் செய்யும் திறனைக் கொண்டுள்ள இந்த இயந்திர மனிதன் மூன்று நபர்களின் செயற்பாடுகளை ஒப்பிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பற்றி அவர் குறிப்பிடுகையில் ''எனது நண்பன் என்னுடன் எப்போதும் இருப்பதுபோல நண்பனின் உருவத்திலேயே இது அமைக்கப்பட்டுள்ளது''என்கிறார் இவர். இயந்திர மனிதனை உருவாக்குவதற்கு தமக்கு 2 வருட கால உழைப்பும் 78,000/= ரூபா பணமும் செலவாகியுள்ளதாகவும் குறிப்பிடுகிறார். இந்த Diropot தன்னகத்தே மூன்று உணரிகளை (Sensor) மட்டும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டுகளில் நானூறுக்கும் மேற்பட்ட புத்தாக்கப் படைப்புக்களை இவர் வெளிப்படுத்தியுள்ளார். அவற்றில் மிகவும் உன்னதமானது 'வாழை மரத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்தல்' ஆகும். தற்போது தமது Lepdiro ஆய்வுகூடத்தில் பல மாணவர்கள் பயனடைவதன் மூலம் தனது கனவுகள் நனவாகி வருவதாகவும் மேலும் பெருமிதத்துடன் தெரிவிக்கிறார்.

அத்தோடு, இவர் உருவாக்கிய Diropot இயந்திர மனிதனின் உடலமைப்பில் Simcard இல்லாத தொலைபேசியும்கூட இலத்திரனியல் சுற்றினால் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இதுவே அவர் செய்திகளுக்கு விடுகின்ற சவாலாகும். செய்மதியின் உதவியின்றி இதனால், பேச முடியும். மன்னார்ப் பிரதேசத்தில் மட்டுமல்லாது ஏனைய பகுதிகளிலும் எத்தனையோ சாதனையாளர்கள் இன்று 'இலை மறை காய்கள் போல' வறுமை காரணமாக, வெளிப்படுத்தப்படாமல் இருக்கின்றனர். இவரைப் போல உள்ள ஏனைய சாதனையாளர்களும் உலகிற்கு வெளிப்படுத்தப்பட வேண்டியவர்களே, இவருடைய கண்டுபிடிப்புக்கள் அனைத்தும் மேலோங்கி வளர வாழ்த்துகின்றோம்.

# 'ஹெரிபொட்டர்' திரைப்படத்தின் இறுதிப்பாகம் வசூலில் சாதனை

உலகப் புகழ் பெற்ற 'ஹெரி பொட்டர்' திரைப்படத்தின் இறுதிப் பகுதி தற்போது பல நாடுகளிலும் திரையிடப்பட்டு வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. ஜே.கே. ரோலிங்க் எழுதிய நாவலே திரைப் படமாக ஒவ்வொரு பாகமாக வெவ்வேறு தலைப்புகளின்கீழ் வெளியாகி ரசிகர்களை மகிழ்வித்து வந்தன. அதன் தொடர்ச்சியாகவே தற்போது 'ஹெரிபொட்டர் என்ட் த டெத்லி ஹலோவ்ஸ்' என்ற பெயரிலான இறுதிப் பாகம் கடந்த ஜூலை மாதம் தொடக்கம் திரையிடப்பட்டுள்ளது.


டேனியல் ரெட்சிலிஃப், எமாவொட்ஸன், ருப்பர்ட் கிரின்ட் ஆகிய மூன்று பேர் இணைந்து நடித்துள்ளதே 'ஹெரிபொட்டர்' திரைப்படத் தொடராகும். இதில் டேனியல் ரெட்சி லிஃப் தான் ஹெரிபொட்டர் கதாபாத்திரத்தில் நடிப்பவராவார். அவருக்கு இப்போது வயது 21. இரண்டாமவரான எமா வொட்ஸன் 'ஹர்மயொனி கிரென்ஜர்' என்ற கதாபாத்திரத்தில் நடிப்பவராவார். அவருக்கு வயது 20. மூன்றாமவரான ருப்பர்ட் கிரின் 'ரொன் விஸ்லி' என்ற பாத்திரத்தில் நடிப்பவராவார். அவருக்கு வயது 22.

ஆனால், இதிலுள்ள விசேட அம்சம் என்னவென்றால், இந்த மூன்று பேருமே ஹெரிபொட்டர் தொடரின் ஆரம்ப அங்கத்தில் நடிக்கும்போது இவர்கள் வயதில் மிகவும் சிறியவர்களாகவே இருந்தனர். ஆனால், இப்போது அவர்கள் இளைஞர்கள். இவர்கள் மூன்று பேருமே கிட்டத்தட்ட பத்து வருடங்களாக குறிப்பிட்ட இந்த ஒரே கதா பாத்திரத்திலேயே தொடர்ச்சியாக நடித்து வந்துள்ளனர்.

எனவே, இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள, ஹெரி பொட்டர் பாத்திரத்தில் நடிக்கும் டேனியல், தொடர்ச்சியாக ஒரே கதாபாத்திரத்தில் நடித்தது போதும் என்ற மனநிலையே தனக்கு தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.


ஹெரிபொட்டர் நாவலை எழுதிய ஜே. கே.ரோலிங் பெருமளவு பணத்தை ஈட்டியதைப் போலவே, அவரது கதைக்கு உயிரூட்டிய இந்த மூன்று இளம் நடிகர்களும் கோடீஸ்வரர்களாக உயர்ந்துள்ளனர். ஹெரி பொட்டர் திரைப்படத்தொடரின் இறுதிப்பாகத்தின் வெளியீட்டு விழாவில் நடிகர்களாகிய இந்த மூவரும் வருகை தந்திருந்த வேளை, ஊடகவியலாளர்களும் ஏராளமான ரசிகர்களும் அங்கு குழுமியிருந்தனர். இதற்கு முன்னர் வெளியாகியிருந்த 'ஹெரிபொட்டர்' ஆறு பாகங்களையும் விட, தற்போது வெளியாகியுள்ள ஏழாவதும் இறுதியுமான 'ஹெரிபொட்டர் என்ட் த டெத்லி ஹலோவ்ஸ்' திரைப்படமானது அதி விசேட தன்மையைக் கொண்டுள்ளதாக விமர்சனங்கள் கூறுகின்றன.

இப்படத்தின் இயக்குனரான டேவிட் யேட்ஸ் முப்பரிமாண (3D) தொழில் நுட்பத்தைக்கொண்டே இதனை அமைத்துள்ளார். அதுமட்டுமன்றி, ஹெரிபொட்டரின் இந்த இறுதிப்பாகமானது.இரண்டு பிரிவுகளாகவே வெளியிடப்படுகின்றது. இதன் முதலாவது பிரிவுதான் தற்போது திரையிடப்பட்டுள்ளது. அதன் இரண்டாவது பிரிவு அடுத்த வருடம் ஜூலை மாதம் திரையிடப்படும்.




### ஹெரிபொட்டர் பற்றிய சில விபரங்கள்

* உலகம் பூராவும் ஹெரிபொட்டர் நாவலின் 400 மில்லியனுக்கும் அதிகமான பிரதிகள் விற்கப்பட்டுள்ளன.
* இந்த நாவல் 69 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
* உலகம் பூராவும் திரையிடப்பட்ட இந்தப் படத்தின் 6 தொடர்கள் மூலம் மொத்தமாக 5.4 பில்லியன் டொலர்கள் வசூலிக்கப்பட்டுள்ளது.





ஜே.கே. ரோலிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ..................................................... நேரம்: 1 மணி 15 நிமிடங்கள்

31. மின்னேரியாக் குளத்தைக் கட்டிய மன்னன் யார்?
    (1) பண்டுகாபயன் (2) மகாசேனன்
    (3) தாதுசேனன் (4) தேவநம்பிய தீசன்

32. இலங்கையின் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?
    (1) பம்பரகந்த (2) துன்கிந்த (3) தியலும (4) லக்ஸபான

33. நீருடன் நன்கு கலக்கக்கூடிய திரவம் எது?
    (1) மண்ணெண்ணெய் (2) பெற்றோல்
    (3) வினாகிரி (4) தேங்காயெண்ணெய்

34. தேசப்படங்களில் புகையிரதப் பாதையைக் காட்டுவதற்குப் பயன்படும் நியம நிறம் எது?
    (1) கறுப்பு (2) சிவப்பு (3) நீலம் (4) கபிலம்

35. இவ்வுருவில் காணப்படும் போக்குவரத்துப் பொலிஸாரின் சமிக்ஞை வெளிப்படுத்துவது;




(1) பின்னால் வரும் வாகனங்கள் நிறுத்துக.
(2) வாகனங்கள் முன்னோக்கி வருக.
(3) முன்னால் வரும் வாகனங்களும் பின்னால் வரும் வாகனங்களும் நிறுத்துக.
(4) முன்னால் வரும் வாகனங்கள் நிறுத்துக.

36. 

இக்குறியீடு வெளிப்படுத்துவது;
(1) நொருங்கக்கூடியது
(2) தீ பற்ற வைப்பது ஆபத்தானது
(3) கவனமாகக் கையாளுங்கள்
(4) இப்பக்கம் மேலே

37. உலர் மின்கலத்தைப் பயன்படுத்தி இரு மின்குமிழ்களை ஒரே தடவையில் ஒளிரச் செய்வதற்கு மூன்று கம்பித் துண்டுகள் தொடுக்கப்படும் விதத்தைப் பின்வரும் படத்தில் வரைந்து காட்டுக.



38. | 3, 0, 4, 8 | இவ்விலக்கங்களைப் பயன்படுத்தி, ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண் யாது? ........................................


39. 'அறுபத்தொன்பதாயிரத்து தொண்ணூற்று நான்கு' என்பதை எண்குறியில் தருக.
.......................................................................

40. ..............., 39999, ............... இவ்வெண்ணின் முந்திய எண்ணையும் பிந்திய எண்ணையும் எழுதுக.

41. எண் 19 ஐ உரோமன் எண்குறியில் எழுதுக. ........................................

42. 1kg சீனியின் விலை ரூபாய் 80.00 எனின், 2kg 750g சீனி வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? ........................................

43. 2kg 750g நிறையுள்ள தேயிலையிலிருந்து எத்தனை 250g தேயிலைப் பைக்கட் தயாரிக்க முடியும்? ........................................

44. 

உருவில் காணப்படும் திண்மத்தில் உள்ள
(i) விளிம்புகளின் எண்ணிக்கை யாது?........................................
(ii) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ........................................

45. பாடசாலை ஒன்றில் 509 மாணவர்களும் இன்னொரு பாடசாலையில் 2,396 மாணவர்களும் உள்ளனர். இரு பாடசாலைகளிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ........................................

46. தொழிற்சாலை ஒன்றில் வாரம் ஒன்றினுள் 8,603 சட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டன. அவற்றில் 4694 விற்கப்பட்டன. எஞ்சியுள்ள சட்டைகளின் எண்ணிக்கையைக் காண்க.
........................................

47. 436 தோடம்பழங்களை 4 பேருக்கு சமனாகப் பகிர்ந்து கொடுத்தால் ஒருவருக்குக் கிடைக்கும் தோடம்பழங்கள் எத்தனை? ........................................

★ ஒரு பூரணமற்ற சிட்டை கீழே காணப்படுகிறது. அதில் உள்ள ஐந்து வெற்றிடங்களையும் நிரப்புக.

| | பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| | பென்சில் | 6 | 5 | 00 | 30 | 00 |
| 48. | அடிமட்டம் | 3 | 12 | 00 | ....... | ....... |
| 49. | வரைதல் புத்தகம் | ....... | 8 | 00 | 40 | 00 |
| 50. | கலர் பெட்டி | 6 | ...... | ...... | 36 | 00 |
| 51. | கொப்பி | ...... | 20 | 50 | 41 | 00 |
| 52. | | மொத்தம் | | | ....... | ....... |




53. தரப்பட்ட தரவுகளின்படி எதிர்காலத்தில் நிகழக்கூடிய நிலைமைகள் பற்றி ஆறு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)

★ இருண்ட ஒரு பெரிய காடு இருந்தது. அங்கே ஒரு மரக்கிளையின் மேலிருந்து ஒரு குருவி தலையை அசைத்து சுற்றுமுற்றும் பார்த்தது. ஆயினும், தனக்கு ஆபத்து எனக் கருதும் எதனையும் அக்குருவி காணவில்லை. அக்குருவி பார்க்காத ஒரு பக்கம் இருந்தது. அது சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால் ........................................

(i) ........................................
........................................
(ii) ........................................
........................................
(iii) ........................................
........................................
(iv) ........................................
........................................
(v) ........................................
........................................
(vi) ........................................
........................................

## வினாத்தாள் II இன் விடைகள்

(நொவெம்பர் 24, டிசம்பர் 1 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

(01) (i) எட்டு மணி நேரம் உறங்க வேண்டும்.
(ii) கடிகாரத்தின் உதவியுடன் எழும்ப வேண்டும்.
(iii) பாதணி, புத்தகப்பை போன்றவற்றை உரிய இடத்தில் வைக்க வேண்டும்.
(iv) மாலையில் (v) அம்மாவிடம்

(02) (i) உலவு (ii) இரங்கினர் (iii) பாணம்

(03) (i) கானகத்தில் மிருகம் நீரின்றி அலைந்தது.
(ii) மரங்கள் காற்றில் அசைந்து ஆடின.

(04) (i) சுஜன் பொய் பேசியதால் எல்லோரும் அவனைத் தூற்றினார்கள்.
(ii) நந்தன் சுத்தவாளி என நீதிபதி தீர்ப்புக் கூறினார்.

(05) (i) உதவி செய்தல் (ii) கொடுத்த வாக்கை மீறல்
(iii) விடாப்பிடியாய் நிற்றல்

(06) (i) வேட்பாளர் (ii) குரவர்

(07) (i) வறுமையிற் செம்மை (ii) எல்லை கடந்த ஆசை துன்பத்தைத் தரும்


(08) பாரதி மகா வித்தியாலயம் கல்வியிற் சிறந்து விளங்கியது.

(09) (i) Classroom (ii) Principal (iii) Teacher

(10) (i) என்னை மன்னிக்கவும். (ii) தயவுசெய்து அமருங்கள்.
(iii) உங்கள் சுகம் எப்படி?

(11) (i) உங்கள் பாடசாலையின் பெயர் என்ன?
(ii) எனக்குத் தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்.

(12) 3 (13) 1 (14) 4 (15) 3 (16) 3 (17) 2
(18) 2 (19) 3 (20) 2 (21) 4 (22) 1 (23) 2
(24) 4 (25) 2 (26) 3 (27) 3 (28) 4 (29) 1
(30) 1 (31) 2 (32) 1 (33) 3 (34) 1 (35) 2
(36) 2 (37)



(38) 8430 (39) 69094
(40) 39998, 40000
(41) XIX (42) ரூபாய் 120.00
(43) 11 பைக்கற்றுக்கள் (44) (i)-6 (ii)-4
(45) 2905 மாணவர்கள் (46) 3909 சட்டைகள் எஞ்சியுள்ளன.
(47) 109 தோடம்பழங்கள் (48) ரூபாய் 36.00 (49) 5 (50) ரூபாய் 6.00
(51) 2 (52) ரூபாய் 183.00
(53) ★ பொருத்தமான ஆறு வாக்கியங்கள்.
★ எதிர்காலத்தில் அமைய வேண்டும்.
★ எழுவாய்-பயனிலை கவனத்தில் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானுக்கு நீர்த்துளிகள் எவ்வாறு செல்கின்றன?



**உலகின் உயிர் வாழ்வாதாரத்திற்கு நீர் அத்தியாவசியமாகின்றது. மனிதர்களும் ஏனைய உயிரினங்களும் தாகத்தைப் போக்கிக்கொள்ளவும் ஏனைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் நீர் உதவுகின்றது. தாவரங்கள் நீரினால் செழித்து வளருகின்றன. உயிரினங்களுக்கு மட்டுமன்றி, கண்ணுக்குத் தெரியாத பக்றீரியாக்கள் போன்ற நுண்ணுயிர்களுக்கும் நீர் அவசியமாகின்றது**

மொத்தத்தில் உலகம் செழிப்புற வானிலிருந்து பொழியப்படும் மழை பெரும் பங்காற்றுகின்றது. ஆகவே, பூமியை நோக்கி வானிலிருந்து மழை பொழிவதற்கு வானுக்கு எங்கிருந்து நீர்த் துளிகள் கிடைக்கின்றன? எனும் விடயம் பற்றியே இங்கு ஆராய உள்ளோம்.

உலகில் உயிரினங்கள் முதன்முதலில் கடலிலேயே உருவாகின. இதன் ஊடாக, உயிரினங்களின் இருப்புக்கு நீர் எவ்வளவு அவசியம் என்பது விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. திரவம் (நீர் நிலைகள்), திண்மம் (பனிப் பாறைகள்), வாயு (நீராவி) என்ற அடிப்படையில் தரையில் நீர் இருக்கின்றது. பெரு மழையின்போது நிலம் ஈரலிப்படைவது மட்டுமன்றி; ஆறு, நீர்வீழ்ச்சிகள் உட்பட, பல்வேறு நீர்நிலைகளும் போஷிக்கப்படுகின்றன. மண்ணில் விழும் நீரானது தரைக்குக் கீழாகவும் இறங்குவதால் தாவரங்கள் வேரினூடாக நீரை உறிஞ்சி வளர்கின் றன. தவிர, தோட்டங்களையும் பெரும் வனாந்தரங்களையும் மழைநீர் வளப்படுத்துகின்றது.

## வானுக்கு நீர்த்துளிகள்

தரையில் இருக்கும் நீர், ஒரு சுற்றோட்ட செயற்பாட்டில் ஈடுபடுகின்றது. இந்த நீர்ச் சுற்றோட்டத்தின் அடிப்படையிலேயே வானுக்கு நீர் சென்றடைகின்றது. சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் நீரானது திரவம், திண்மம், வாயு ஆகிய வடிவங்களைப் பெறுகின்றது. ஆறு, ஏரி, வாவி உட்பட, பூமியில் இருக்கும் நீர்நிலைகளிலிருந்து நீரானது சூரியஒளியினால் நீராவியாகி மேலெழுகின்றது. அத்துடன், தாவரங்களிலிருந்து ஆவியீர்ப்பினாலும் நீரானது நீராவியாகி மேல்நோக்கிக் கடத்தப்படுகின்றது. இந்த நீராவி உறைந்து வானில் முகில்களாக மாற்றமடைகின்றது. இந்த முகில்களில் அதிகளவு நீர் சேர்ந்து நிறை கூடும்போது அது ஒடுங்கி மழையாகவோ அல்லது பனித்துளிகளாகவோ பூமியை வந்தடைகின்றது. இந்த செயற்பாடு தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருப்பதால், இதனை நீர் வட்டம் (நீர்ச் சுற்றோட்டம்) என்பர்.

## நீர் வட்டம் (The Water Cycle)




## நீர் வட்டத்தின் பிரதான சந்தர்ப்பங்கள்

*** வீழ்ச்சி:**

ஒடுங்கும் நீராவியானது மழைவீழ்ச்சி, பனித்துளி, பனிப்பொழிவு போன்ற நிகழ்வுகளினூடாக தரையை வந்தடைகின்றது. பொதுவாக, பூமியில் வருடாந்தம் 505,000 கன கி.மீ மழை பொழிகின்றது. இதில் 398,000 கன கி.மீ மழைவீழ்ச்சி சமுத்திரங்களின் மீதே பொழிகின்றது.

*** பனிப்பாறை உருகல்:**

துருவ மற்றும் துருவம் சார்ந்த பகுதிகளில் சூரியஒளி படும்போது பனிக்கட்டி கரைய ஆரம்பிக்கின்றது. பனிக்கட்டிகளிலிருந்து நீரானது சிறிய ஏரிகளாகி பெருக்கெடுத்து ஒடுகின்றது.

*** பெருக்கெடுத்தல்:**

நிலத்தின் மீதுள்ள நீர் பெருக்கெடுத்து ஓடும் பல சந்தர்ப்பங்களும் உள்ளன. அதிக மழைவீழ்ச்சியின்போது, ஏரிகள் மற்றும் ஆறுகள் உட்பட சிறிய-பெரிய நீர்நிலைகள் பெருக்கெடுத்து ஓடுவதனாலும் நிலத்தின் மீது நீர் தேங்குவதனாலும் இந்நிலை ஏற்படுகின்றது. பெருக்கெடுத்து ஓடும் நீரைத் தவிர, எஞ்சும் நீர் புவி மேற்பரப்பிலுள்ள நீர்நிலைகளில் தேங்கி நிற்கும். இந்த நீரானது சூரியஒளி கிடைக்கும்போது ஆவியாகி மேலெழுகின்றது.

*** கசிதல்:**

நிலத்தின் மேற்பகுதியில் விழுகின்ற அல்லது இருக்கின்ற நீரில் ஓரளவு நிலத்தின் அடியிலும் கசியும். மண் ஈரலிப்பாக இருக்கவும் நீரூற்றுக்கள் ஏற்படவும் நிலத்திற்குள் கசிவடைந்த இந்த நீரே காரணமாக இருக்கின்றது.

*** ஆவியாகுதல்:**

கடல், ஆறு, நீர்வீழ்ச்சி ஆகிய நீர்நிலைகளிலிருந்து நீர் ஆவியடைவதற்கு காரணம், அது சூரியஒளியினை உறிஞ்சிக்கொள்வதாகும். அவ்வாறே, தாவரங்களிலிருந்தும் புவி மேற்பரப்பிலிருந்தும் உறிஞ்சிக்கொள்ளப்படும் நீரானது நீராவியாகி வளிமண்டலத்தினை அடையும்.

## நீர் வட்டம் பாதிப்படைதல்

புவியில் உயிரினங்கள் பாதுகாப்பாகவும் தம் இருப்பினைப் பேணிக்கொள்ளவும் வேண்டுமாயின், நீர் வட்டம் சரியான முறையில் செயற்பட வேண்டும். இதில் ஏதேனும் இடையூறுகள் ஏற்படின் முழு இயற்கையினது இயக்கமும் பாதிப்படையும். இதனால், எமக்கு குடிநீர் பற்றாக்குறையும் மேலும் பல அனர்த்தங்களும் ஏற்படலாம்.

## நீர் வட்டத்தில் தடைகளை ஏற்படுத்தும் மனித செயற்பாடுகள்

- விவசாய நடவடிக்கைகள்
- தொழிற்சாலைகள்
- வளிமண்டலத்தில் விடப்படும் பலதரப்பட்ட ரசாயனக் கலவைகள்
- வேலிகள் அமைத்தல்
- காடழிப்பு
- நிலத்தடி நீரினை அதிகம் பயன்படுத்தல்
- ஆறுகளில் இருந்து நீரினைப் பெறல்
- நகரமயமாதல்

நீர் வட்டம் சிறப்பாக செயற்படுவதற்குரிய சக்தி சூரியஒளியிலிருந்தே கிடைக்கின்றது. வளிமண்டலத்தில் உள்ள நீராவியில் 86 சதவீதமானவை சமுத்திர மேற்பகுதி நீர் ஆவியாவதனாலேயே வளிமண்டலத்தினை அடைகின்றது. வளிமண்டல வெப்பநிலை மாற்றத்தில் வளிமண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. இந்த நீராவி ஒடுங்குவதனாலேயே மழை கிடைக்கின்றது. ஆனால், வளிமண்டலத்தில் நீராவியின் அளவு குறைவடைவதனால் மழைவீழ்ச்சி கிடைக்காமல் போகக்கூடும். இதனால், வளமான நிலங்கள் பாலைவனமாகி விடும். பச்சைவீட்டு விளைவு வாயுக்களின் சதவீதம் அதிகரிப்பதனால் புவியின் வெப்பநிலையும் அதிகரிக்கும். அவ்வாறே, நைட்ரஜன் மற்றும் காபன் ஆகிய இயற்கை சுற்றோட்ட செயற்பாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலிய

## இத்தாலியை ஐக்

தரம் 11 பாடத்திட்டத்திற்கு உட்பட்டது


ரோம் நகரின் இன்றைய தோற்றம்




**20 ஆம் நூற்றாண்டில் நடத்த இரு உலக யுத்தங்களில் ஈடுபட்ட-ஐரோப்பிய நாடுகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நாடாக இத்தாலி அமைந்துள்ளது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி வரை அதாவது, 1872 வரை இது ஒரு நாடாக ஐக்கியப் படாமல் சிறு சிறு ராச்சியங்களாகப் பிளவுபட்டிருந்தது. சவோய், பீட்மன்ட், நீசு, லொம்பாடி, பாமா, வெனீசியா, சார்டீனியா தீவு, மொடேனா, தஸ்கனி, பாப்பரசரின் அரசுகள், ரோம், நேப்பிள்ஸ், சிசிலித்தீவு என பல சிற்றரசுகளாக பலராலும் பல நாடுகளின் தலைமீட்டுடன் அங்கு ஆட்சி நடைபெற்றது.**

19 ஆம் நூற்றாண்டு வரையில் இத்தாலியை ஒற்றுமைப்படுத்துவதில் பல காரணங்கள் தடையாக இருந்தன. வெவ்வேறு பிரதேசங்கள் வெவ்வேறு வெளிநாட்டு ஆதிக்கங்களின்கீழ் இருந்து வந்தமை இதில் பிதானமான காரணமாகக் குறிப்பிடலாம். இத்தாலியை ஐக்கியப்படுத்துவதற்கு மாபெரும் பணிகளைப் பலர் முன்னெடுத்தாலும், ஜோசப் மாசினி, கவுன்ட் கவூர், கரிபால்டி போன்றவர்கள் இதில் மிக முக்கிய மானவர்கள். விக்டர் இமானுவேல் அரசக்குத் தலைமை தாங்கத் தயாராக இருந்தார். இவர்களைத் தவிர, பிரான்சிய மன்னன் மாவீரன் நெப்போலியன் பொனபார்ட் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையினால் இத்தாலியின் பல பகுதிகளைக் கைப்பற்றி ஒன்றுபடுத்தியமையால் இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வுகள் தோற்றம் பெறலாயின.


19 ஆம் நூற்றாண்டில் ரோம் நகர்


18 ஆம் நூற்றாண்டில் வெனீசியா படகுத்துறை

## கவூர் பிரதமராதலும் இத்தாலிய விடுதலையும்

1852 இல் கவூர் என்பவர் பீட்மன்ட் ராச்சியத்தின் பிரதமரானதுடன், இத்தாலிய விடுதலைப் பிரச்சினை ஒரு புதிய சகாப்தத்தை எய்தியது. இவரது காலத்தில் அரும்பெரும் குணங்களும் தேசப்பற்றும் மிக்க படைத்தலைவர்களினால் இத்தாலிய விடுதலை இயக்கம் பேணி வளர்க்கப்பட்டது. இத்தாலிய ஐக்கியத்தின் உண்மைச் சிருஷ்டியான கவூரின் உதவியில்லாவிடின், மாசினியினதும் கரிபால்டியினதும் முயற்சிகள் விரயமாகியிருக்கும் எனக் கருதப்பட்டது. கவூர் மிகச்சிறந்த மதிநுட்பமும் ராஜதந்திரமும் நிறைந்தவர். சமயத்திற்கேற்ப, காய் நகர்த்தி எடுத்த காரியத்தில் வெற்றி பெறுபவர். மிகச்சிறந்த நிர்வாகி. அவரது மதிநுட்பம் மாசினியின் சுதந்திர தாகத்தையும் கரிபால்டியின் ஆயுத பலத்தையும் தேச விடுதலைக்கு உபயோகம் உள்ள கருவிகளாக மாற்றி, ஈற்றில் எல்லோருடைய கனவுகளையும் நனவாக்கினார்.



பீட்மன்ட் - சார்டீனியா ராச்சியம்

## பீட்மன்டை பலப்படுத்தல்

இத்தாலி ஐக்கியத்திற்குத் தலைமை தாங்க வேண்டுமாயின், முதலில் பீட்மன்ட் ராச்சியத்தைப் பலப்படுத்த வேண்டும் என எண்ணிய கவூர், அரசியல் துறையிலும் பொருளாதாரத்துறையிலும் பலம்மிக்க ஒரு அரசாக பீட்மன்டை கட்டியெழுப்பினார். நாடாளுமன்ற அரசியல் முறையை நிலைநாட்டினார். அதை வளர்ச்சியுறச் செய்தார். புகையிரத வீதிகளை அமைத்தார். வர்த்தகத்தை வளர்த்தார். நிதி நிலையை உறுதிப்படுத்தினார். ராணுவத்தைப் புனருத்தாரணம் செய்து பலம் பெறச் செய்தார். திருச்சபையின் அதிகாரங்களைக் குறைத்தார். இந்த உள்நாட்டு சீர்திருத்தங்கள் மாத்திரமன்றி; பிறநாட்டு விவகாரங்களில் அவர் பெற்ற பெருமை இதிலும் பன்மடங்கு மகிமை உடையது.

## வல்லரசின் ராணுவ உதவி

பீட்மன்ட் ராச்சியத்தை எவ்வளவுதான் பலப்படுத்தினாலும், பிற ஐரோப்பிய நாடுகளின் ஆதரவும் குறைந்தபட்சம் ஒரு பலம் மிக்க வல்லரசின் ராணுவ உதவியும் தமக்கு அவசியம் தேவை என்பதை கவூர் நன்குணர்ந்திருந்தார். ஏனெனில், அப்போதைய ஐரோப்பிய வல்லரசுகளான ஒஸ்ட்ரியாவும் பிரான்ஸும் இத்தாலிய ஐக்கியத்திற்குத் தடைக்கல்லாக இருக்கும் என்பதை கவூர் நன்குணர்ந்திருந்தார். ஒஸ்ட்ரியாவானது வெனீசியா, லொம்பாடி உட்பட, பல பிரதேசங்களைத் தன்வசம் வைத்திருந்தது. மறு பக்கத்தில் பிரான்ஸின் அப்போதைய ஆட்சியாளரான 3 ஆம் நெப்போலியன் இத்தாலிய ஐக்கியத்தை எதிர்த்தான். எனவே, இவ்விரு வல்லரசுகளுடன் தாம் மோத வேண்டி இருக்கும் என்பதை உணர்ந்த கவூர், ஒரு பலம்மிக்க நாட்டின் ராணுவ உதவியை நாடினார்.

## கவூரும் க்றிமியன் போரும் (1854-1856)

இத்தாலிய பிரச்சினையை ஐரோப்பிய நிலைக்கு உயர்த்தத் திட்டமிட்ட கவூர், 1854 முதல் 1856 வரை நடைபெற்ற 'க்றிமியன்' யுத்தத்தை அதற்குரிய ஓர் அரிய ஆயுதமாக உபயோகித்தார். இத்தாலிய ஐக்கியத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கும் ஒஸ்ட்ரியாவை ஒரு போரில் தோற்கடித்தால்தான், அதன் வசம் இருக்கும் இத்தாலிய பிரதேசங்களாகிய பாமா, தஸ்கனி, மொடேனா, வெனீசியா, லொம்பாடி ஆகியவற்றை தம்வசப்படுத்த முடியும். இதற்கான வியூகத்துடனேயே பிரித்தானியாவும் பிரான்ஸும் இணைந்து ரஷ்யாவுக்கெதிராக தொடுத்த 'க்றிமியன்' போரில் எவ்வித பகைமையும் அற்ற ரஷ்யாவுக்கெதிராக, பிரித்தானியா, மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் சார்பில் 15,000 சார்டீனிய போர் வீரர்களை களத்திற்கு அனுப்பினார். அவர் எதிர்பார்த்தபடி சார்டீனியாப் படைகள் பெரு வெற்றி பெற்றன. இதன் விளைவாக, 1856 இல் பெரிஸில் கூடிய வல்லரசுகளின் மாநாட்டில் கவூர் இடம்பெற்றார். இதனால், இத்தாலிய பிரச்சினை ஒஸ்ட்ரியாவின் உள்நாட்டுப் பிரச்சினையில் இருந்து சர்வதேச நிலைக்கு உயர்ந்தது. ஐரோப்பிய ராஜதந்திரிகள் கவூருக்கு தமது அனுதாபத்தைத் தெரிவித்தனர். 3 ஆம் நெப்போலியன் இத்தாலிக்கு உதவ முன்வந்தான். கவூரின் 'க்றிமியன்' யுத்த நோக்கம் நிறைவேறியது.

## ப்ளொம்பியர்ஸ் உடன்படிக்கை

1858 ஆம் ஆண்டு 3 ஆம் நெப்போலியனும் கவூரும் ப்ளொம்பியர்ஸ் (Plombieres) எனுமிடத்தில் ரகசியமாகச் சந்தித்து ஒஸ்ட்ரியாவுக்கு எதிராகப் போர் செய்யவும் இத்தாலி அமைப்பை மாற்றி அமைக்கவும் முடிவு செய்து உடன்படிக்கைக்கு வந்தனர். 3 ஆம் நெப்போலியன் இத்தாலிய விடுதலையில்


விக்டர் இமானுவேல்


க்றிமியன் யுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ய ஐக்கியம்

## ஐக்கியப்படுத்திய வரலாற்று நிகழ்வுகள்

அக்கறை காட்டினானே தவிர, இத்தாலிய ஐக்கியத்தை ஆதரிக்கவில்லை. இத்தாலி ஒன்றாவதை அவர் ஏற்க மறுத்தார். எனவே, லொம்பாடி மற்றும் வெனீசியா பிரதேசங்களை மட்டும் ஒஸ்ட்ரியாவிடம் இருந்து மீட்டுக்கொடுக்கப் போர் புரிய ஒப்புக்கொண்டார்.

### ஒஸ்ட்ரியாவுக்கெதிரான பிரெஞ்ச்-சார்டீனிய யுத்தம்

ப்ளொம்பியர்ஸ் ஒப்பந்தத்தின்படி, ஒஸ்ட்ரிய யுத்தம் விரைவாக ஏற்பட்டது. கவூருடைய 100,000 போர் வீரர்களுக்கு ஆதரவாக, நெப்போலியனின் 200,000 போர் வீரர்கள் சார்டீனியாவின் பக்கம் நின்றனர். ஒஸ்ட்ரியாவை 'மஜென்டா' என்ற இடத்தில் வெற்றிகண்ட பிரெஞ்ச்-சார்டீனிய துருப்புகள் லொம்பாடியைக் கைப்பற்றின. இதனைத் தொடர்ந்து மியானுக்குள் பிரவேசித்த சார்டீனிய துருப்புக்கள் ஒஸ்ட்ரியாவின் படையை வெனீசியாவிலுள்ள பலம் வாய்ந்த கோட்டைகளுக்குள் முடங்கச் செய்தன. சார்டீனியர் வெனீசியாவிலிருந்தும் ஒஸ்ட்ரிய துருப்புகளை விரட்டியடித்து வெற்றி நிச்சயம் என்ற நிலையில், நெப்போலியன் சடுதியாக யுத்தத்தை நிறுத்தினார். விலா பிறாங்காவில் ஒஸ்ட்ரியாவுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டார். இதனால், சார்டீனியா லொம்பாடியைப் பெற்றது. ஒஸ்ட்ரியா வெனீசியாவைத் தக்க வைத்துக்கொண்டது.


கவுண்ட் கவூர்

### இத்தாலிய ஐக்கியத்தின் வளர்ச்சி



லொம்பாடியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஒஸ்ட்ரியாவின் பிடியில் இருந்த பாமா, மொடேனா, தஸ்கனி ஆகிய ராச்சியங்களின் பிரஜைகள் தம் அரசர்களை நாட்டைவிட்டு விரட்டினர். பாப்பரசரின் பிரதேசமான ரோமக்னா,பொலொஞ்ஜா ஆகிய அனைத்தும் சார்டீனியாவுடன் இணைந்துகொள்ள வாக்களித்தன. வெற்றியின் மத்தியில் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு தமக்கு 3 ஆம் நெப்போலியன் துரோகம் இழைத்த போதிலும், வாக்குறுதிப்படி சவோய், நீசு மாகாணங்களை கவூர், 3 ஆம் நெப்போலியனுக்கு வழங்கி மத்திய ராச்சியங்கள் சார்டீனியாவுடன் இணைவதற்கு நெப்போலியனின் சம்மதத்தைப் பெற்றார். இவ்வாறு இத்தாலிய ஐக்கியத்தின் இரண்டாம் படி பூர்த்தியாயிற்று. தொடர்ந்து வட இத்தாலியில் வெனீசியா நீங்கலாக, ஏனைய அனைத்துப் பகுதிகளும் ஐக்கியமும் விடுதலையும் பெற்றன. 1860 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்


சுதந்திரத்திற்கான முதலாவது இத்தாலியப் போரின்போது



க்றிமியன் யுத்த வரைபடம்

விக்டர் இமானுவேல் அல்ப்ஸ் மலைகளிலிருந்து பாப்பரசர் ராச்சியம் வரை வெனீசியா நீங்கலாக வியாபித்துக்கிடந்த, முழு வட-மத்திய இத்தாலியின் மன்னனானார். எனினும், அடுத்த ஆண்டே நேப்பிள்ஸ், சிசிலி, பாப்பரசரின் ராச்சியங்கள் முழுவதையும் (வத்திக்கான் நீங்கலாக) விக்டர் இமானுவேல் ஒற்றுமைப்படுத்தியதைக் கண்டு ஐரோப்பாவே வியப்பால் ஸ்தம்பிதம் அடைந்தது.

### கரிபால்டி

1807 இல் நீசு என்ற இடத்தில் ஒரு கப்பலோட்டிக்கு மகனாக கரிபால்டி பிறந்தார். கல்வியில் நாட்டம் கொள்ளாது இளமைப் பருவத்திலிருந்து 10 ஆண்டுகள் மாலுமித் தொழிலில் பயிற்சி பெற்று, நல்ல உடல் வலிமையும் தடைகளைத் தகர்த்தெறியும் ஆற்றலையும் பெற்றார். காலப்போக்கில் இத்தாலியிலிருந்து நாடு கடத்தப்பட்ட தேசாபிமானிகளின் நட்புக் கிடைத்ததால், நாட்டுப்பற்றையும் சுதந்திர உணர்ச்சியையும் பெற்றார். 1833 இல் மாசினிக்கு அறிமுகமாகி, 'யௌவன இத்தாலி' இயக்கத்தில் சேர்ந்தார். 1836 இன் பின் 12 வருடங்கள் தென் அமெரிக்காவில் றியோ கிரான்டே குடியரசில் சேனைத் தலைவராக நியமிக்கப்பட்டு கெரில்லாப் போர் முறைகளில் தனித்திறமை பெற்றார்.

1848 இல் இத்தாலி முழுவதும் புரட்சி ஏற்பட்டதைக் கேள்வியுற்று தாய்நாட்டின் விடுதலைக்காக நாடு திரும்பினார். ஒஸ்ட்ரியாவுக்கெதிரான போரில் சார்டீனியாவுக்கு தன் சேனையை அர்ப்பணித்தார். இவரது சேனையில் பெருமளவிலானோர் ஒஸ்ட்ரியரின் துப்பாக்கிகளுக்கு இரையாகினர்.வழியில் தனது மனைவியையும் இழந்த கரிபால்டி, அங்கிருந்து தப்பி அமெரிக்காவுக்கு கப்பலேறினார். ஆனால், 1854 இல் தாயகம் மீண்டு சார்டீனியாவுக்கு அருகில் கப்றேறா தீவை விலைக்கு வாங்கி அங்கு வீட்டை அமைத்து எளிமையாக வாழ்ந்தார். 1856 இல் கவூரை முதன்முறை சந்தித்ததன் பின்னர் தான் விரும்பிய குடியரசு வாதத்தைக் கைவிட்டு, முடியரசை ஏற்றதனால் நாட்டின் விடுதலை இயக்கங்கள் யாவும் ஒன்றுபட்டன.


3 ஆம் நெப்போலியன்


கரிபால்டி


ஜோசப் மாசினி

### சிசிலி மீது ஆயிரவரின் படையெடுப்பு

சிசிலித் தீவு மக்களுக்கு தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றும் நோக்கில் வரலாற்றுப் புகழ்வாய்ந்த ஆயிரவருடன் கரிபால்டி சிசிலிக்குப் பயணமானார். மே 11 இல் கரிபால்டியின் படை சிசிலியில் இறங்கி தலைநகரான பலேமோவை நோக்கி விரைந்து முன்னேறியது. இந்த நடவடிக்கை மூலம் 3 மாதங்களுக்குள் சிசிலி கைப்பற்றப்பட்டது. அதேவருடம் ஓகஸ்ட் மாதம் கடல் கடந்து நேப்பிள்ஸ் ராச்சியத்திற்குள் வெற்றி முரசுடன் பிரவேசித்த கரிபால்டி ஜூன் 31 இல் றேஜியோவைக் கைப்பற்றினார். செப்டெம்பர் 6 இல் நேப்பிள்ஸ் நகர மக்களின் கரகோசத்தின் மத்தியில் கரிபால்டி வந்திறங்கினார். மக்கள் அவரை 'மீட்பர்' என அழைத்து வரவேற்றனர்.


அதனைத் தொடர்ந்து விக்டர் இமானுவேலின் துருப்புகள் பாப்பரசரின் ராச்சியங்களுக்குள் பிரவேசித்து அம்பிறியா, மாச்சஸ் மாகாணங்களைக் கைப்பற்றின. ஒக்டோபர் 27 இல் கரிபால்டி தான் கைப்பற்றிய பிரதேசங்களையும் தனது துருப்புக்களையும் தன் அதிகாரத்தையும் விக்டர் இமானுவேலுக்கு கையளித்தார். நொவெம்பர் 9 ஆம்

இமானுவேல் சிசிலி, நேப்பிள்ஸ் அனைத்திற்கும் மன்னராக முடிசூட்டப்பட்டார். அடுத்தநாள் கரிபால்டி தனக்குக் கிடைத்த பரிசுகளையும் பட்டங்களையும் உதறித் தள்ளிவிட்டு, கப்றேறா சென்றுவிட்டார். 1861 இல் டியூரினில் கூடிய முதல் இத்தாலிய நாடாளுமன்றத்தில் ரோம், வெனீசியாவைத் தவிர, ஏனைய அனைத்து இத்தாலிய பிரதேச பிரதிநிதிகள் மத்தியில் விக்டர் இமானுவேல் இத்தாலியின் அரசராகப் பிரகடனம் செய்யப்பட்டு முடிசூட்டப்பட்டார். அதே ஆண்டு கவூர் காலமானார்.

### இத்தாலிய ஐக்கியத்தின் நிறைவு

இறுதியில் வெனீசியாவும் ரோமும் மாத்திரமே எஞ்சி நின்றன. இதில் வெனீசியா ஒஸ்ட்ரியாவினாலும் ரோம் பிரான்சினாலும் பாதுகாக்கப்பட்டன. 1866 இல் ஜேர்மனி ஐக்கியத்திற்காக, பிரெசியா ஒஸ்ட்ரியாவுடன் போரில் இறங்கியபோது, இத்தாலி பிரெசியாவுக்கு உதவி செய்ததன் மூலம் ஒஸ்ட்ரியாவை முறியடித்து வெனிசீயாவை இத்தாலியுடன் இணைத்துக்கொண்டது. அதேபோல் 1870 இல் பிரான்ஸுக்கெதிரான பிரெசிய யுத்தத்தில் இத்தாலி பிரெசியாவுக்கு உதவியதால் பிரான்ஸை முறியடித்து ரோமைக் கைப்பற்றியது. 1872 ஆம் ஆண்டு ஜூலையில் விக்டர் இமானுவேலின் தலைமையில் இத்தாலியின் தலைநகரை ரோமில் அமைத்து இத்தாலிய ஐக்கியம் நிறைவேறியது.

**-இரஞ்சித் ஜெயகர்**


விக்டர் இமானுவேலின் ஞாபகார்த்த அம்சங்கள் அடங்கிய கட்டடத்தொகுதி


நெப்போலியன் பொனபார்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் அறிவும்

பொன்னும் பொருளும் விளையும் பூமியான மாணிக்கபுரியை மணிகண்டன் எனும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் தன் மகளுக்குத் திருமணம் செய்து வைக்க அன்பும் அறிவுக்கூர்மையும் மிக்க ஓர் இளைஞனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என எண்ணினான். அதற்காக, அவன் ஒரு போட்டியை அறிவித்தான். அப்போட்டியில் பங்குபற்றுவதற்காக, பல நாடுகளிலிருந்தும் பல இளவரசர்கள் வந்திருந்தனர். ஊர் மக்களும் இந்தப் போட்டியைப் பார்க்க அரண்மனை அருகில் கூடியிருந்தனர்.

வந்திருந்த இளவரசர்கள் மத்தியில் மன்னன் மணிகண்டன் தோன்றினான். மன்னனின் ஆணையின்பேரில் போட்டியில் பங்குபற்ற வந்திருந்த அனைவருக்கும் அரைப்படி அரிசி வீதம் வழங்கப்பட்டது. அனைவரும் போட்டி எதுவோ? எப்படியோ? என்று சிந்தித்து நிற்க மன்னன் எழுந்து ''அழைப்பை ஏற்று வந்திருக்கும் இளவரசர்கள் மற்றும் அனைவருக்கும் வணக்கம்! உங்கள் கையிலிருக்கும் அரைப்படி அரிசியில் நீங்கள் செய்ய வேண்டியது, ஆயிரம் உயிர்களுக்கு உணவிட்டு நீங்களும் பசியாறி மீதிக் கால்படி அரிசியை சேமித்து வைக்க வேண்டும்''என்றான்.

அனைவரும் திகைத்தனர். ''என்ன அரைப்படி அரிசியில் ஆயிரம் உயிர்களுக்கு உணவிட்டு நாமும் உண்டு மீதி கால்படி அரிசி இருக்க வேண்டுமா...?'' என்று முணுமுணுத்தனர். சிலர் ''இது முடியாத காரியம் நடக்கக்கூடியதல்ல'' எனக் கூறினர். ''மாணிக்கபுரி மன்னனுக்குப் புத்தி பேதலித்து விட்டது'' என்று முணுமுணுத்தனர். அவர்கள் செய்வதறியாது நின்றபோது, திடீரென அங்கு ஒரு சலசலப்பு ஏற்பட்டது.

மாடு மேய்க்கும் அந்நாட்டு இளைஞன் ஒருவன் அரசனின் முன் வந்து நின்ற படி.''அரசே! பணிவுடன் வணங்குகின்றேன். என் பெயர் மதியழகன். இப்போட்டியில் நானும் கலந்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் வழங்கும்படி வேண்டுகின்றேன்'' எனக் கூறினான்.



போட்டிக்கு வந்திருந்த இளவரசர்களும் ஏனைய பிரமுகர்களும் நகைத்தனர். பெரியோர்கள் அவனை எச்சரித்தனர். ஊர் ஜனங்கள் பயந்தனர். இந்தளவு பெரிய அரச குமாரர்களால் முடியாததை இவனா செய்யப் போகின்றான்? வீணே மன்னனின் கோபத் திற்கு ஆளாகப் போகின்றானே என்று வேதனைப்பட்டனர். எனினும், மன்னனோ அவனுக்கும் அரைப்படி அரிசி வழங்க உத்தரவிட்டார். அரிசியைப் பெற்றுக்கொண்ட மதியழகன் மீண்டும் அரசனைப் பார்த்து, ''மன்னா! தங்கள் போட்டியின்படி, நானிதனைச் செய்து காட்ட வேண்டுமானால் நான் அழைக்கும் இடத்திற்குத் தாங்கள் வர வேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்'' என்றான். யாவரும் திகைத்தனர். வீணே மன்னனின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்கின்றானே என்று மீண்டும் பேசிக் கொண்டனர். ஆனால், மன்னனோ ''ஆகட்டும்'' என்றதும் மதியழகன் முன்னே நடக்க மன்னனும் பரிவாரங்களுடன் பின்தொடர்ந்தான். சிறிது நேரம் நடந்து ஊர் எல்லையில் உள்ள அடர்ந்த காட்டை அடைந்தனர்.

காட்டில் சுள்ளிகள் சில பொறுக்கி சிறிய பானை ஒன்றை எடுத்துக் கால்படி அரிசியைப் போட்டுச் சமைத்த மதியழகன், மீதிக் கால்படியைப் பத்திரமாகப் பையில் போட்டுக்கொண்டான். சமையல் முடிந்ததும் மூன்று பெரிய இலைகள் பறித்து வந்து மூன்றிலும் சமமாக சமைத்த சாதத்தை எடுத்து வைத்தான். மன்னன் உட்பட, அனைவரும் நடப்பவற்றை வியப்புடனும் ஆவலுடனும் பார்த்தபடியே நின்றனர். மூன்று இலைகளில் ஒன்றிலிருந்த சாதத்தை சுறுசுறுப்புடன் இயங்கிக்கொண்டிருக்கும் எறும்புகளின் புற்று அருகில் சென்று பரவலாகப் போட்டான்.

சிறிது நேரத்தில் அதில் ஆயிரம் அல்ல; ஆயிரமாயிரம் எறும்புகள் வெளிவந்து மொய்த்துக் கொண்டன. அதன்பின் மன்னனைப் பார்த்த மதியழகன், ''மன்னா ஆயிரம் இல்லை.ஆயிரம் ஆயிரம் உயிர்கள் பசியாறுகின்றன. இதோ, இலைகளில் சாதம் உள்ளது. உட்காருங்கள். அவை எனக்கும் உங்களுக்கும்''என்றான்.

மன்னனும் உட்கார்ந்தான். மன்னனுக்கு ஓர் இலை சாதத்தை வைத்துவிட்டு, மறு இலையில் உள்ள சாதத்தைத்தான் உண்டு முடித்தான். உண்டு முடிந்ததும் முன்னரே மீதப்படுத்தி வைத்திருந்த மீதிக் கால்படி அரிசியை எடுத்து, ''மன்னா! ஆயிரம் உயிர்களுக்கு உணவளித்து, நான் மட்டுமல்ல; நீங்களும் உண்டு மீதியாகவுள்ள கால்படி அரிசி, இதோ'' என்றான்.

''இந்தப் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக நான் இதில் பங்குபற்றிக் கொள்ளவில்லை. மாணிக்கபுரி மன்னனுக்குப் புத்தி பேதலித்து விட்டது என்று கூறிய இழுக்கைப் போக்கவும் எம் நாட்டு மன்னன் மட்டுமல்ல; மாடு மேய்க்கும் இளைஞனும் அறிவின் சுடர்கள் என்பதை எடுத்துக் காட்டவுமே இதில் கலந்து கொண்டேன். மன்னருக்கு நான் தந்த சிரமத்திற்கு மன்னிக்க வேண்டும். நான் வருகிறேன்'' என்று கூறி நடக்க முற்பட்ட மதியழகனின் கையைப் பிடித்துக் கட்டியணைத்த மன்னன், ''மதியழகா! மாணிக்கபுரியின் மானம் காத்தது நீதானப்பா, உயிர்களிடத்தில் அன்பும் அறிவுக் கூர்மையும் உள்ள நீதான் இந்த நாட்டை ஆள வேண்டியவன், என் மகளுக்கு ஏற்றவனும் நீதான்!'' என்று கண்ணீர் மல்கக் கூறினான். அனைவர் மனதிலும் மகிழ்ச்சியும் நிறைவும் காணப்பட்டன.

*பஸ்னியா பஸ்மி, தரம் - 9, வியாங்கல்லை மு.ம.வித்.*

# ஊடகம்



ஊடகமே! ஊடகமே!
இன்றைய நவீன உலகில்
நீயும் மனிதனே!
உன்னை நண்பனாக நினைக்கும்
இக்கால கட்டத்தில்
நீ என்றும் உயர்ந்தவனே!
பல வழிகளிலும் பணி செய்யும்
நீ என்றும் சேவகனே!
பல துறைகளில் முன்னோடியாக
இருப்பவனே!
சூரியன் இன்றி ஒளி இல்லை!
அதுபோல் நீயின்றி
இன்றைய
உலகமில்லை!

டபிள்யூ.சத்தியவதனி,
தரம் - 9,
மா/எல்கடுவ த.ம.வித்.

# பாரதி கூறிய அறிவுரை

புதுமைப் பெண் பற்றிப் பாடிய மகாகவி பாரதியார், மக்களுக்குப் பல அறிவுபூர்வமான கருத்துக்களையும் கூறியிருக்கிறார். பெண் குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும். ஆண்களோடு பழகுவதில் அவர்களுக்கு எத்தகைய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கேள்விகளுக்கெல்லாம் தெளிவான ஒரு விடையைக் கொடுத்துள்ளார்.

பெண் அடிமைத்தனம் அவருக்குப் பிடிக்காது. ஆனால், பெண்கள் வரம்பு மீறி நாகரிகமென்று நடப்பதே தவறு. அத்துடன், பெண்களை உள்ளே அடக்கி வைத்தலும் தவறு என்பது அவருடைய சித்தாந்தம்.

'வீட்டில் பெண்களைப் பூட்டி வைப்பதால் எவ்வித பயனும் இல்லை. பெண்கள், மனதில் களங்கமின்றி ஆண்களோடு பழக வேண்டும். அவ்வாறே ஆடவர்களும் பெண்களுடன் உள்ளத்தில் மாசின்றி உறவாட வேண்டும். இவ்வாறு நடந்தால் ஒவ்வொருவர் மனமும் பரிசுத்தமாகி விடும்' என்றார் பாரதியார்.



பெண்கள் யாருக்கும் அஞ்சித் தலை குனியக் கூடாது. யாரேனும் தீய எண்ணத்துடன் உன்னை நோக்கினால், நீ அவனைத் தைரியமாக உற்றுப்பார். அவன் வெட்கித் தலை குனிந்து சென்று விடுவான். குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே விவாகம் பற்றிக் கூறி அவர்கள் மனதில் ஆசையை ஏற்படுத்தி விட்டால் அவர்கள் ஆசைப்படி, கணவன் அல்லது மனைவி வாய்க்காவிடில் மனமுடைந்து அவர்களின் வாழ்க்கை ஒரு பாலைவனம் போலாகிவிடும். அந்தவகையில், குழந்தைகள் மனதில் தவறான ஆசைகளை, எண்ணங்களை ஏற்படுத்தக் கூடாது என்பதும் அவரது கருத்துக்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

பி.எனஸ் போல்,
தரம் - 10B, காவத்தை, நவோதயா த.ம.வித்.






# வரலாறு தரும் பாடம்

வரலாறு என்றால் இறந்தகால நிகழ்வுகளை, நிகழ்காலத்தில் கற்று எதிர்காலத்தைச் செம்மைப் படுத்துவதற்கான ஒரு இயல் ஆகும். கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஹெரடோஸ் என்பவரே, வரலாற்றின் பிதாவாக கருதப்படுகிறார். அவர், கிரேக்க மொழியில் பயன்படுத்திய 'இஸ்ரோறியா' என்ற சொல்லின் மூலம் வரலாறு என்பது ஆராய்ச்சியின் விளைவாகப் பெறப்பட்டிருக்கும் தகவல்கள் என்கிறார். இஸ்ரோறியா எனும் சொல்லின் அடிப்படையிலேயே வரலாறு என ஆங்கிலத்தில் குறிப்பிடும் 'ஹிஸ்ட்ரி' எனும் பதம் உருவாகியது.

வரலாறு என்பது ஒரு கற்பனைக் கதையாக இருந்து வர[illegible] தொடர்பாக, முறையான காரண, காரியங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் அல்லது கால ஒழுங்கில் முன்னெடுத்துச் செல்லப்படும் உண்மையான சம்பவங்களின் ஒரு தொகுதியாக அது இருந்து வருகின்றது. வரலாற்றைக் கற்பது இறந்த காலம் குறித்துப் பெருமை அடைவதற்கோ அல்லது அது குறித்து பச்சாதாபம் அடைவதற்கோ அல்ல. வரலாற்று நிகழ்வுகளின் ஊடாக உண்மையை தேடிச் செல்வதும் அதற்கூடாக, நிகழ்காலத்தைச் செம்மைப் படுத்தி, எதிர்காலத்தை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்வதுமே அதன் ஒரே நோக்கமாகும்.



வரலாறு என்பது நெடிது வளர்ந்து, கிளை பரப்பி, காய்கனிகள் நிறைந்த ஒரு பிரமாண்டமான மரத்தைப் போன்றது. அதில் காயும் இருக்கும். கனியும் இருக்கும். அதில் சிறந்ததைப் பெறுவது நம் புத்திசாலித்தனம். அவ்வாறு செயற்படுவதால் எந்தவொரு நாடும் மிகுந்த சௌபாக்கியத்தைப் பெறும் என்பதே உண்மையாகும். எனவே, நாம் உலக வரலாறுகளையும் நம்நாட்டு வரலாறுகளையும் சிறப்பாகக் கற்று சிறப்பாக வாழ்வோமாக.

என்.என்.பர்ஷானா, தரம் - 10,
க/விக்னேஸ்வரா த.ம.வித்., பன்விலை.



# கல்வி

*கல்வி எனும் கடலில் மூழ்கி*
*வெற்றி எனும் முத்தைப் பெற*
*முயன்றிடுவோம் மாணவர் நாம்*
*உயர்ந்திடுவோம் உலகினிலே!*

*காலங்கள் பல சென்றாலும்*
*கரையாத ஊற்றுக் கல்வியே*
*முழுமையாய் நிலைக்குமே*
*முத்துப் போல் சிரிக்குமே கல்வி!*

வி.தியாகு, தரம் - 9,
மா/கணேஸ்வரா வித்.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுண்ணும் பறவை தீக்கோழி





சிறகுகள் சிறியவை. அவை பறக்கப் பயனற்றவை. எனினும், இப்பறவை வேகமாக ஓடும்போது உடலைச் சமநிலையில் வைக்கவே இச்சிறகுகள் உதவுகின்றன.





ஆங்கிலத்தில் 'ஒஸ்ட்ரிச்' என அழைக்கப்படும் தீக்கோழி ஒரு அதிசயப் பறவையாகும். இப்பறவை கற்களை உண்ணும் தன்மையுடையது. அது மட்டுமா? அவை இரும்புத் துண்டுகளையும் அதுபோன்ற ஏனைய பொருட்களையும் உண்ணும் தன்மையுடையன. இது உண்ணுவதில் மிகவும் பேராசை பிடித்த பறவையாகும். சில சமயங்களில் தாவரங்கள், விதைகள், பழங்கள் (Berry) போன்றவற்றையும் உண்ணும். உணவை நன்கு அரைத்து சமிபாடடையச் செய்யவே இப்பறவைகள் கல்லையும் இரும்புத் துண்டுகளையும் உண்ணுகின்றன.

பறவை இனங்களிலேயே தீக்கோழிதான் உருவத்தில் ஏனைய பறவைகளையும்விடப் பெரியவை. பெரும்பாலான தீக்கோழிகள் ஆபிரிக்கா கண்டத்தில்தான் வாழ்கின்றன. இதன் நிறை சுமார் 130 கி.கிராம் ஆகும். உயரம் 2.5 மீற்றராகும். இவற்றின் கால்கள் மிக நீளமானவையாகக் காணப்படுவதுடன் அவை ஒவ்வொன்றிலும் இரண்டு விரல்கள் உள்ளன. கழுத்து நீண்டும் தலையில் இறகுகளின்றியும் காணப்படுகின்றன. ஆண் தீக்கோழிகளுக்கு கறுப்பு அல்லது கடுஞ்சிவப்பு நிற இறகுகள் உள்ளன. அவற்றின் கால்கள் வெள்ளை நிறம் கொண்டவை. ஆனால், பெண் தீக்கோழிகளின் இறகுகள் சிறியதாகவும் வெள்ளை நிறம் கொண்டதாகவும் காணப்படும்.

இன்று உலகில் வாழும் பறவைகளில் இப்பறவைகள்தான் மிகப் பெரிய முட்டைகளை இடுகின்றன. ஒவ்வொரு முட்டையும் 15 முதல் 18 செ.மீற்றர் நீளம் வரை காணப்படுகின்றன. அதன் விட்டமோ, 12 முதல் 15 செ.மீற்றர் வரை காணப்படும். பொதுவாக 3 அல்லது 4 பெண் தீக்கோழிகள் ஒன்று சேர்ந்து ஒரு குகை போன்ற கூட்டைக் கட்டி அதில் முட்டைகளை இடுகின்றன. ஆண் தீக்கோழிகள்தான் அடைகாத்து இரவு வேளையில் குஞ்சு பொரிக்கின்றன. அத்துடன், தீக்கோழிகள் மிக வேகமாக ஓடும் ஒரு பறவை இனமாகும். மணித்தியாலத்திற்கு இவை சுமார் 50 மைல் வேகத்தில் ஓடும் இயல்புடையன.

**இரஞ்சித் ஜெயகர்**

# மழையினால் பாதிக்கப்பட்ட 'சாரணியர்' நிலையம்

## பார்வையிட சகோதர சாரணியர்க்கு அழைப்பு

இலங்கை சாரணியப் பரம்பரையினரின் இல்லமான சாரணிய சங்க நிலையம் அண்மையில் பெய்த



கடும் மழை காரணமாக, வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இம் மழையினால் பல அடி உயரத்துக்கு வெள்ளம் ஏற்பட்டு பல வருடகால கடும் உழைப்புக்கள் அர்ப்பணிப்புக்கள் என்பன சில நிமிட நேரத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலைமை மிகவும் துயரத்துக்குரியது. கடந்த 93 வருட காலத்தில் இலங்கை சாரணியர் சங்கம் நம் நாட்டின் சிறுமியர் மற்றும் இளம் பெண்களுக்கு எண்ணற்ற சேவைகளை வழங்கியுள்ளது.

அந்தவகையில், வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான பயிற்சி, பொறுப்பு மற்றும் நற்பண்புகள் பற்றிய அறிவூட்டல், சமூக சேவைகளில் பங்குபற்றல், சுகாதாரம் மற்றும் சமூக நலன்களில் கவனம் எடுப் பது தொடர்பான அறிவைப் பரப்புதல், தன்னம்பிக்கையை ஊட்டும் வகையில் இளம் பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல்







போன்ற பல சேவைகள் இவற்றில் அடங்கும்.

முன்னாள் சாரணியர்கள் ஒன்றிணைந்து தம் வாழ்வுக்கு நல்வழி காட்டிய இச்சங்கத்துக்கு உதவிபுரிய வேண்டிய காலம் தற்பொழுது உருவாகியுள்ளதாக மேற்படி சங்கம் தெரிவிக்கின்றது.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3873

உமர் ஷுக்ரி,
தரம் - 1,
கோல்டன் றூட் பாட.,
கலகெதர மடிகே.



அங்.இல: 3874

எஃப்.ஸபியா,
தரம் - 2B,
முஸ்லிம் பெ.தே.பாட.,
தா்ஹா நகர்.



அங்.இல: 3875

எஃப்.ஷஃபா,
தரம் 3B,
அல்-மனார் மத்.கல்.,
கல்முனை.



அங்.இல: 3876

எம்.முபீன்,
தரம் - 5B,
ஸாஹிரா கல்.,
திருகோணமலை.



அங்.இல: 3877

ஜே.ஜக்சயன்,
தரம் - 6D,
யாழ்.மத்.கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3878

எஸ்.பிரதிபா,
தரம் - 8,
ஹெவன்பிட்டி த.ம.வித்.,
கறப்பளை.



அங்.இல: 3879

எல்.அனுஜன்,
தரம் - 8,
ஹெவன்பிட்டி
த.ம.வித்., கறப்பளை.



அங்.இல: 3880

ஆர்.றொஷான்,
தரம் - 8,
ஹெவன்பிட்டி த.ம.வித்.,
கறப்பளை.



அங்.இல: 3881

ஆர்.சாந்தகுமார்,
தரம் - 9,
கலைமகள் த.வித்.,
கொழும்பு-14.



அங்.இல: 3882

எஃப்.நிஸ்ரீன்,
தரம் - 11,
அல்-அஸ்ஹர் மு.வித்.,
ஹெம்மாதகம.



அங்.இல: 3883

எம்.விமலகாந்தன்,
தரம் - 9,
ஹெவன்பிட்டி
த.ம.வித்., கறப்பளை.



அங்.இல: 3884

எம்.நிக்ஷன்,
தரம் - 11,
ஹெவன்பிட்டி த.ம.வித்.,
கறப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாவலப்பிட்டி, வெஸ்ட்ஹோல் தோட்டத்தைச் சேர்ந்த உதயஜோதி-பிரியதர்ஷினி தம்பதியரின் செல்வப் புதல்வி பவிஷா, 20.11.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்-சிவா)



மல்வானையைச் சேர்ந்த பௌமி-பரீதா தம்பதியரின் செல்வப் புதல்வி பர்வீன், 22.11.2010 அன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் : எம்.அர்ஷாத்)




கல்முனை சுற்றாடல் பசுமைப் பாதுகாப்பு அமைப்பினால் 'நிழல் தரும் மரங்கள்' எனும் தொனிப்பொருளின்கீழ் மரம் நடும் வைபவமொன்று அண்மையில் கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலய வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வின்போது, பாடசாலையின் சுற்றாடல் கழகப் பொறுப்பாசிரியர்களான எம்.றம்சான், ஏ.றிபான் மற்றும் சுற்றாடல் பசுமைப் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் நிப்றாஸ் மன்சூர் ஆகியோர் மரக்கன்றொன்றை நடுவதனை படத்தில் காணலாம்.

(தகவல்: எம்.நிப்றாஸ்)

## ஓவியம் வரைவோம் - 27

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

நம் மத்தியில் பல்வேறு உடல்வாகினைப் பெற்றவர்கள் இருக்கின்றனர். அதனை மெலிந்தவர்கள், சாதாரண உடல்வாகினைப் பெற்றவர்கள், உடற் பருமன் அதிகரித்தவர்கள் என மூன்று பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

அந்தவகையில், கடந்த இதழில் மெலிந்த உடல்வாகினைப் பெற்ற ஆண், பெண் உடற் தோற்றம் பற்றி நோக்கினோம். இந்த இதழில் உடற்பருமன் அதிகரித்தவர்களின் உடற்தோற்றத்தை வரைவது பற்றி அறிந்து கொள்வோம்.



பொலன்னறுவை, ஹெவன்பிட்டி தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள், அண்மையில் நடைபெற்ற மொழி இலக்கியத்திறன் விருத்திப் போட்டியில் பேச்சு, கவிதை, பாடல் இயற்றல், நாட்டார் பாடல், கட்டுரை, சிறுகதை, சித்திரம், தனியிசை, விவாதம் ஆகிய பிரிவுகளில் கலந்துகொண்டு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்கள் தங்கள் அதிபர், பிரதியதிபர் ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

(தகவல்: பாலன் சுதாகரன்)



## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ஐஸ்வர்யா, தரம் - 7, கிங்ஸ்டன் சர்வதேச பாட., கொழும்பு-15.



எஃப்.சமீமா, தரம் - 9B, கு/பறகஹதெனிய தே.பாட., பறகஹதெனிய.



சுமையா பாரிஸ், தரம் - 7A, மு.பெ.தே.பாட., தர்கா நகர்.



லிவா காமில், தரம் - 1A, நூரானியா மு.ம.வித்., உயன்வத்தை.



எம்.சப்றாஸ், தரம் - 9A, அந்நூர் தே.பாட., வாழைச்சேனை-04.



ம.இமேஜ்ராஜ், தரம் - 10A, கோளாவில் விநாயகர் ம.வித்., கோளாவில்-02.




ஹா.அப்றத் அலி, தரம் - 8E, அல்-அஷ்றக் தே.பாட., நிந்தவூர்.




சி.ஜீவானந்தன், தரம் - 5, வடிவாம்பிகா த.ம.வித்., சிலாபம்.



எம்.ஃபஹ்ரான், தரம் - 6D, அஸ்ஹர் கல்., அக்குறணை.



எம்.பஹ்ரான், தரம் - 3B, அல்-ஹுமைசரா தே.பாட., சீனங்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாத்துக்களுடன் சேர்ந்து சூழ்ச்சி




"மாமா, இது உண்மை அல்ல"

"எது உண்மை அல்ல?"

"மாமா, நானாக்கும் புழுவைத் தோண்டி எடுத்தேன்...இந்த வாத்துக்களைக் கேளுங்கள். அவை பார்த்துக் கொண்டிருந்தன. புழுவை நான் தோண்டி எடுத்தபோது, சிட்டுக்குருவி பாய்ந்து வந்து திருடிக் கொண்டது"

எண்ணங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு அவன் முணுமுணுத்தான்;

"இது எப்படி? ஏய், சிட்டுக் குருவி, நீ என்ன உண்மையில் மோசடியா செய்கிறாய்?"

"நான் பொய் சொல்லவில்லை. சுள்ளான் தான் பொய் சொல்கிறது. வாத்துக்களோடு சேர்ந்து சூழ்ச்சி செய்திருக்கிறது..."

"நீ சொல்வது என்னவோ சரியாகப் படவில்லை. ஹ்ம்.... ஆமாம்? புழு அற்ப விஷயந்தான். ஆனால், திருடுவது நல்லதல்ல. திருடிய பேர்வழி பொய் சொல்லவும் வேண்டும். சரிதானே நான் சொல்வது? ..."

"சரிதான்! சரிதான்!" என்று எல்லாம் மறுபடி கத்தின.

"எதற்கும் நீ முள்மீனுக்கும் சிட்டுக்குருவிக்கும் ஏற்பட்ட வழக்கைத் தீர்த்து வை! அவர்களில் யார் சொல்வது உண்மை? எல்லாம் கூச்சல் போட்டன. சண்டை பிடித்தன. ஒன்றை ஒன்று உசுப்பி விட்டன"

"யார் சொல்வது உண்மை? அட குறும்புக்காரப் பிராணிகளா... முள்மீன் சுள்ளான், சிவ்வுச் சிட்டுக் குருவி, இரண்டுமே குறும்புக்காரப் பிராணிகள்... மற்றப் பிராணிகளுக்கு உதாரணமாக உங்கள் இருவருக்கும் தண்டனை கொடுக்கப் போகிறேன்... ஊம், சட்டென்று சமாதானம் செய்து கொள்ளுங்கள், இப்போதே"

"மெய்தான்! சமாதானம் செய்து கொள்ளட்டும்" என்று எல்லாப் பிராணிகளும் ஒரே குரலில் கத்தின.

"உழைத்துப் புழுவைத் தோண்டி எடுத்த சுள்ளானுக்கு ரொட்டிப் பொருக்குகள் தின்னக் கொடுப்பேன். எல்லாவற்றுக்கும் திருப்தி ஏற்படும்" என்று முடிவு செய்தான் யாஷா.

"அருமையான முடிவு!" என்று எல்லாம் மறுபடியும் கத்தின. புகை போக்கி துடைப்பான் ரொட்டியை எடுக்கக் கையை நீட்டினான். ஆனால், அதைக் காணோம். புகைபோக்கி துடைப்பான் வழக்கைத் தீர்த்துக் கொண்டிருந்த நேரத்தில் சிட்டுக்குருவி ரொட்டியைத் திருடிவிட்டது.

"அட கொள்ளைக்காரக் குருவி!" என்று ஆத்திரத்தோடு சொல்லின. எல்லா மீன்களும் எல்லாப் பறவைகளும் திருட்டுக் குருவியைத் துரத்திப் பிடிக்கக் கிளம்பின. ரொட்டித் துண்டு கனமாக இருந்ததால், அதை எடுத்துக்கொண்டு வெகுதூரம் பறக்கக் குருவியால் முடியவில்லை. மற்றப் பறவைகள் சரியாக ஆற்றுக்கு மேலே அதை எட்டிப் பிடித்தன.

சரியான அடிபிடி சண்டை நடந்தது. ஒவ்வொன்றும் பிய்த்துப் பிடுங்கியதால் பொருக்குகள் சிதறி ஆற்றில் விழுந்தன. பின்பு மிச்சத் துண்டும் ஆற்றில் விழுந்தது. அங்கே மீன்கள் அதற்காகச் சண்டை போட்டன. மீன்களுக்கும் பறவைகளுக்கும் பலத்த போராட்டம் நடந்தது. ரொட்டித் துண்டு முழுவதும் பிய்ந்து பொருக்குகளாகச் சிதறிப் போயிற்று. மீன்கள் பொருக்குகளை எல்லாம் தின்று விட்டன. ரொட்டித் துண்டிலிருந்து பெயருக்குக்கூட எதுவும் மிஞ்சவில்லை. ரொட்டித் துண்டு முழுவதும் பிய்ந்து பொருக்குகளாகச் சிதறிப் போயிற்று. மீன்கள் பொருக்குகளை எல்லாம் தின்று விட்டன. ரொட்டித் துண்டிலிருந்து எதுவும் மிஞ்சவில்லை. ரொட்டித் துண்டு முழுவதையும் தின்ற பிறகுதான் எல்லாம் சுய நிதானத்துக்கு வந்தன. திருட்டுக் குருவியைத் துரத்தப் போய், வழியிலேயே திருட்டு ரொட்டியைத் தின்றுவிட்டோமே என்று எல்லாம் வெட்கம் அடைந்தன.

புகைபோக்கித் துடைப்பான் யாஷாவோ, கரையில் உட்கார்ந்து இதைப் பார்த்துச் சிரித்தான். எல்லாம் ஒரே கேலிக்கூத்தாக முடிந்துவிட்டது.... எல்லாப் பிராணிகளும் அவனிடமிருந்து ஓடிப் போய்விட்டன. சுள்ளான் குருவி மட்டுந்தான் இருந்தது.

"நீ ஏன் எல்லாவற்றோடும் பறந்து போகவில்லை?" என்று கேட்டான் யாஷா.

"எனக்கும் பறந்து போக ஆசைதான், நான் உருவத்தில் சின்னவன், மாமா. பெரிய பறவைகள் என்னைக் கொத்துமே"

"அப்படியானால் இங்கே இருப்பதே உனக்கு நல்லது. சுள்ளான் பிள்ளாய். நீயும் நானும் சாப்பாட்டைப் பறிகொடுத்துவிட்டோம். ஆனால், எம் நண்பன் சிட்டுக்குருவி நல்லவன்தான் அது ஏன் இப்படி நடக்கிறது என்று தெரியவில்லை. அதை நாம் திருத்த வேண்டும். ஆமாம் மாமா அவனை நாம் திருத்த வேண்டும் என்று ஆமோதித்தது உள்ளான் குருவி.

(முற்றும்)

(அடுத்த இதழில் 'வேப்ப மரத்தடிப்பேய்' ஆரம்பமாகிறது)

# கண்ணனின் சேமிப்பு



கடைக்குச் சென்று காய்கறிகளை வாங்கிக் கொண்டு திரும்பிய கண்ணனிடம், பையையும் மிகுதிப் பணத்தையும் வாங்கிக்கொண்டாள் கற்பகம். மீதிப்பணத்தைச் சரி பார்த்தாள். சரியாக இருந்தது. "நீ ஏதாவது வாங்கிக்கோ கண்ணா" என்ற கற்பகம், ஒரு பத்து ரூபாவை அவனிடம் நீட்டினாள்.

அதை வாங்கிக்கொண்ட கண்ணன் மகிழ்ச்சியோடு அடுத்த அறைக்குள் நுழைந்தான். அறையின் கடைசியில் அவனது புத்தகப் பை மாட்டப்பட்டிருந்தது. அதனருகே ஒரு தகர உண்டியல். அந்த உண்டியலில் அம்மா கொடுத்த பணத்தைப் போட்டான் கண்ணன். பின்னர் விளையாடுவதற்காக ஓட்டம் பிடித்தான்.

இரண்டு வாரங்களுக்குப் பின் ஒருநாள் மாலை ஆறு மணி இருக்கும்.

சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தார் கண்ணனின் தந்தை விசுவம். சைக்கிளை வீட்டின் வராண்டாவில் நிறுத்திப் பூட்டி விட்டுக் களைப்புடன் உள்ளே நுழைந்தார். சட்டையைக் கழற்றிக் கொடியில் போட்டு விட்டு நாற்காலியில் சாய்ந்த போது, கற்பகம் எதிரே வந்து நின்றாள்.

"என்னங்க, ஸ்கூல் நாலரைக்கு விட்டிருக்குமே! ஏதாவது மீட்டிங்கா? இவ்வளவு லேட்டா வர்றீங்களே?" என்று கேட்டாள்.

"அதெல்லாம் இல்லை கற்பகம். ஸ்கூல் விட்டவுடன் நேராக வீட்டுக்குத்தான் வாறேன்" என்றார் விசுவம் அலுப்புடன். அப்போதுதான் விளையாடிவிட்டு அம்மா என்றவாறே உள்ளே நுழைந்தான் கண்ணன்.

"இருடா வாறேன்" என்றபடி கற்பகம் கணவனிடம், "அப்புறம் ஏன் இவ்வளவு நேரமாகி வாறீங்க? மணி ஆறாகப் போகுதே"

"எல்லாம் நம்ம சைக்கிள் செய்த வேலைதான்"

"என்ன சொல்றீங்க நீங்க?" என்ற கற்பகம், எதுவும் புரியாமல் கணவனைப் பார்த்தாள்.

"ஆமாம் கற்பகம், சைக்கிள் டியூப்பை ஏற்கனவே இரண்டு, மூன்று முறை பஞ்சர் ஆகி ஒட்டியிருந்தேன். இன்னைக்கு சாயந்தரம் ஸ்கூல் விட்டதும் சைக்கிளில் ஏறினேன். அதுக்கு என் மேல் என்ன கோபமோ தெரியல, உடனே 'படார்'னு வெடிச்சுட்டுது. டியூப் மட்டுமில்லை, டயரும் கிழிஞ்சிட்டுது"

"அடடா, அப்படியா?"

"ஆமாம், அதனால்தான் சைக்கிளைத் தள்ளிகிட்டே நடந்து வந்தேன். நேரமாயிட்டுது"

"ஸ்கூலில் இருந்து தள்ளிக்கிட்டே வர்றீங்களா? நாலு கிலோமீற்றர் தூரமிருக்குமே.."

"ஆமாம்"

"அப்படின்னா, நாளைக்கு ஸ்கூலுக்கு எப்படிப் போவீங்க?"

"அதுதான் எனக்கும் புரியல. கிழிஞ்ச டயரை இனிமேல் தைக்க முடியாதுன்னு கடைக்காரன் சொல்லிட்டான். டயர், டியூப் இரண்டையும் புதுசாத்தான் போட்டாகனும். கையில் சுத்தமாகப் பணம் இல்லை. மாசக்கடைசி வேற, யார்கிட்ட கேட்டாலும் பணம் நிச்சயம் கிடைக்காது. என்ன செய்யறதுன்னு தெரியல. நாலு கிலோ மீற்றர் தூரமும் இனி ஒரு வாரத்துக்கு நடந்தேதான் போகனும்"

அம்மாவும், அப்பாவும் பேசிக் கொண்டிருந்ததைக் கண்ணன் கேட்டுக்கொண்டிருந்தான். பின், மெல்லத் திரும்பி அறைக்குள் நுழைந்தவன், சற்று நேரத்தில் கையில் தகர உண்டியலுடன் திரும்பி வந்தான்.

"அப்பா, நீங்களும் அம்மாவும் எனக்குக் கொடுத்த காசை செலவு பண்ணாமல் இதில் போட்டபடியே வந்தேன். பாதி உண்டியல் நிரம்பி இருக்கு. இதிலிருக்கிற பணத்தை எடுத்தால் உங்க சைக்கிளுக்கு வேண்டிய டயரையும் டியூப் பையும் வாங்கிவிடலாம். நீங்களும் நடக்காமல் தினம் சைக்கிளிலேயே ஸ்கூலுக்குப் போகலாம்" என்ற கண்ணன், அந்த உண்டியலைத் திறந்து, அதிலிருந்த பண நோட்டுக்களை அவர் முன் இருந்த மேஜை மீது கொட்டினான்.

விசுவமும் கற்பகமும் காசை எண்ணத் தொடங்கினார்கள். தேவையான பணத்திற்கு மேலதிகமாகவே அதில் பணம் இருந்தது. "என்ன இருந்தாலும் நம்ம பையனின் சமர்த்தே சமர்த்து. அவனோட சேமிப்பு நல்ல நேரத்துல நமக்குப் பயன்படுகிறது பார்த்தீங்களா?" என்றாள் கற்பகம், மகிழ்ச்சி நிறைந்த குரலில்.

"உண்மைதான். இந்தப் பணம் மட்டும் இப்போ இல்லேன்னா, நான் இன்னும் ஒரு வாரத்திற்கு எவ்வளவு சிரமப்படணும்" என்றவர், கண்ணனை அருகே அழைத்து அவன் நெற்றியில் பாசத்துடன் முத்தமிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் கமல், அம்மா, ராஜா ஆகியோருக்கு இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

රාජා: ආයුබෝවන්. මේ කමල්ගේ ගෙදරද?
ஆயுபோவன். மே கமல்கே கெதறத?
ராஜா: வணக்கம். இது கமலின் வீடா?



අම්මා: ඔව්. මේ මහත්මයා කවුද?
ஒவ். மே மஹத்மயா கவுத?
அம்மா: ஆம். நீங்கள் யார்?

රාජා: මම රාජා. කමල්ගේ යාලුවෙක්.
மம ராஜா. கமல்கே யாலுவெக்.
ராஜா: நான் ராஜா. கமலுடைய நண்பன்.

අම්මා: ආ... පුතා කිව්වා ඔයා එයි කියලා.
ஆ.... புதா கிவ்வா ஒயா எய் கியலா.
அம்மா: ஆ..... நீங்கள் வருவதாக மகன் சொன்னார்.

ඇතුළට එන්න; වාඩිවෙන්න.
எதுளட என்ன; வாடிவென்ன.
உள்ளே வாருங்கள்; அமருங்கள்.

කමල්: රාජා... ගේ හොයාගන්න අමාරු වුණාද?
ராஜா.... கே ஹொயாகன்ன அமாரு வுனாத?
கமல்: ராஜா... வீட்டைக் கண்டுபிடிக்க சிரமப்பட்டீர்களா?

රාජා: නෑ. මම හන්දියේ කඩෙන් අහගත්තා.
நெஹெ. மம ஹந்தியே கடென் அஹகத்தா.
ராஜா: இல்லை. நான் சந்தியில் கடையில் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

කමල්ගේ ගේ හරි ලස්සනයි.
கமல்கே கே ஹறி லஸ்ஸனய்.
கமலுடைய வீடு அழகாக இருக்கிறது.



කමල්: හුඟක් මහන්සිවෙලා තමා හදාගත්තේ.
ஹுங்கக் மஹன்சிவெளா தமா ஹதாகத்தே.
கமல்: மிகவும் கஷ்டப்பட்டுத்தான் கட்டினேன்.

කමල්: රාජා ගෙයක් හැදුවේ නැද්ද?
ராஜா கெயக் ஹெதுவே நெத்த?
கமல்: ராஜா ஒரு வீடு கட்டவில்லையா?

රාජා: තවම හදාගෙන යනවා. මේ කාලේ වියදමත් වැඩියිනේ.
தவம ஹதாகென யனவா. மே காலே வியதமத் வெடிய்னே.
ராஜா: கட்டிக்கொண்டுதான் இருக்கின்றேன். இந்நாட்களில் செலவும் அதிகம்தானே.

අම්මා: පුතා රාජාව එක්කන් එන්න තේ බොන්න.
புதா ராஜாவ எக்கன் என்ன தே பொன்ன.
அம்மா: மகன் ராஜாவை தேநீர் குடிக்க அழைத்து வாருங்கள்.



කමල්: අපි තේ බොන්න යමු රාජා.
அபி தே பொன்ன யமு ராஜா.
கமல்: நாங்கள் தேநீர் குடிக்கப் போவோம் ராஜா.

රාජා: හොඳයි. බොහෝම ස්තූතියි.
ஹொந்தய். பொஹோம ஸ்தூதிய்.
ராஜா: நல்லது. மிக்க நன்றி.

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.

உதாரணம்: நான் கமலுடைய நண்பன்.
මම කමල්ගේ යාලුවෙක්.

i. உங்களுடைய வீடு அழகாக இருக்கின்றது.
..........................................................



ii. வீட்டைக் கண்டுபிடிக்க சிரமப்பட்டீர்களா?
..........................................................

iii. இந்த நாட்களில் செலவு அதிகம்.
..........................................................




**Have been** எனும் கூட்டு வினைச்சொல்லை (Compound Verb) அல்லது **Has been** எனும் கூட்டு வினைச்சொல்லை, நிகழ்கால எச்சவினைச் சொல்லுடன் (Present Participle) அதாவது **'ing'** சேர்ந்த வினைச்சொல்லுடன், தனித்தனியாகக் கையாண்டு அமைக்கப்படும் வாக்கியங்கள் நிகழ்கால வினைமுற்று தொடர் வாக்கியங்கள் ஆகும் என இதுவரை படித்த பாடங்களில் கற்றோம் அல்லவா?

அந்த வாக்கியங்களை மீண்டும் ஒருமுறை அவதானித்துக்கொண்டு, அடுத்த பாடத்துக்குச் செல்வோம்.

(அ) I have been writing a story since morning.
காலையில் இருந்து, நான் கதை ஒன்றை எழுதி வருகின்றேன்.
(நிகழ்கால வினைமுற்று தொடர் வாக்கியம்)
(Present Perfect Continuous Tense)

(ஆ) He has been writing a story since morning.
காலையில் இருந்து அவன் கதை ஒன்றை எழுதி வருகின்றான்.
(நிகழ்கால வினைமுற்று தொடர் வாக்கியம்)
(Present Perfect Continuous Tense)

✱ இனி அடுத்த பாடத்துக்கு வருவோம். அதாவது, **Have been** எனும் கூட்டு வினைச்சொல்லை (Compound Verb) அல்லது **Has been** எனும் கூட்டு வினைச்சொல்லை, இறந்தகால எச்சவினையுடன் (Past Participle) தனித் தனியாகக் கையாண்டு அமைக்கப்படும் வாக்கியங்கள், செயற்பாட்டு வினை (Passive Voice) வாக்கியங்களாக அமைகின்றன.

✱ இவ்வாறு அமைகின்ற செயற்பாட்டு வினை (Passive Voice) வாக்கியங்கள், நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களில் காணப்படுகின்ற, செய்வினை (Active Voice) வாக்கியங்களுக்குரிய செயற்பாட்டு வினை (Passive Voice) வாக்கியங்கள் ஆகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உதாரணங்கள் மூலம் அவற்றை இங்கே பயில்வோம்.

(அ) I have written that story.
நான் அந்தக் கதையை எழுதியுள்ளேன்.
[நிகழ்கால வினைமுற்று (செய்வினை) வாக்கியம்]
(Active Voice of the Present Perfect Tense)

(ஆ) That story has been written by me.
அந்தக் கதை என்னால் எழுதப்பட்டுள்ளது.
[நிகழ்கால வினைமுற்று (செயற்பாட்டு வினை) வாக்கியம்]
(Passive Voice of the Present Perfect Tense)

(இ) He has written a letter.
அவன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளான்.
[நிகழ்கால வினைமுற்று (செய்வினை) வாக்கியம்]
(Active Voice of the Present Perfect Tense)

(ஈ) A letter has been written by him.
கடிதம் ஒன்று அவனால் எழுதப்பட்டுள்ளது.
[நிகழ்கால வினைமுற்று (செயற்பாட்டு வினை) வாக்கியம்]
(Passive Voice of the Present Perfect Tense)

(உ) You have taken that parcel.
நீ அந்தப் பொதியை எடுத்துச் சென்றுவிட்டாய்.
[நிகழ்கால வினைமுற்று (செய்வினை) வாக்கியம்]
(Active Voice of the Present Perfect Tense)

(ஊ) That parcel has been taken by you.
அந்தப் பொதி உன்னால் எடுத்துச் செல்லப்பட்டு விட்டது.
[நிகழ்கால வினைமுற்று (செயற்பாட்டு வினை) வாக்கியம்]
(Passive Voice of the Present Perfect Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்வோம்




◆ உலக தொலைக்காட்சி தினம் எப்போது?

**நொவெம்பர் 21 ஆம் திகதி**

◆ இலக்கியத்திற்கான நொபெல் பரிசினை வென்ற முதலாவது ஆசிய நாட்டவர் யார்? எந்த ஆண்டில் அப்பரிசு வழங்கப்பட்டது?



**ரவீந்திரநாத் தாகூர், 1913 ஆம் ஆண்டில்**

◆ ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் 'தங்கம்' வென்று காலப்போக்கில் 'டார்ஸன்' (Tarzan)திரைப்படத்தில் நடித்துப் புகழ் பெற்றவரின் பெயர் என்ன?



**ஜொன்னி வியஸ்மல்லர் (Johnny Weissmuller)**

◆ எந்த நாட்டின் நகரம் 'காற்று நகரம்' என அழைக்கப்படுகின்றது?



**அமெரிக்காவின் சிக்காகோ நகரம்**

◆ சிங்கப்பூரின்தலைநகர் எது?

**சிங்கப்பூர்**

◆ 'ஸ்டோடின்' என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற நாடாளுமன்றம் எந்த நாட்டில் அமைக்கப் பட்டுள்ளது?



**நோர்வே**

◆ பதின்மூன்று தீவுகளின் கூட்டிணைவில் உருவாக்கப்பட்டுள்ள 'சிட்டி ஒஃப் வோட்டர்' என்பது எந்த நாட்டின் நகரம்?



**சுவீடன் நாட்டின் ஸ்டொக்ஹோம் நகரம்**

# நியூஸிலாந்தில் சுரங்கத்துக்குள் சிக்கிய பணியாளர்கள் மரணம்

நியூஸிலாந்தின் நிலக்கரி சுரங்கத்துள் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக அதனுள் சிக்கியிருந்த 29 பணியாளர்களும் மரணமடைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.





முன்னதாக வந்த செய்திகளின்படி குறித்த சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிப்பையடுத்து சுரங்கத்துள் பரவிய ஒருவகை விஷ வாயுவின் காரணமாக, மீட்பு நடவடிக்கைகளில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக 'ரொபோ' இயந்திரமொன்றை சுரங்கத்தினுள் இறக்கி மீட்புப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த வெடிப்புச் சம்பவத்தின் போது, ஏற்பட்ட தீயின் காரணமாக, சுரங்கத்தினுள் காபன் மொனொக்சைட் விஷவாயு பரவிய காரணத்தினால் மீட்புப் படையினர் நேரடியாகப் பணிகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.

சுரங்கத்தினுள் உள்ள ஒட்சிசன் தாங்கிகள் வெடித்தமையினால் தீ மேலும் பரவியிருந்தது.

இத்தகைய நிலையில் கடந்த 24 ஆம் திகதியன்று அதே பகுதியில் இன்னுமொரு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்ததையடுத்தே, குறித்த பணியாளர்கள் அனைவரும் மரணமடைந்திருப்பதாக செய்திகள் வெளியாகின. இதனைப் பொலிஸாரும் உறுதிப்படுத்தினர்.

நியூஸிலாந்தின் தென் பகுதியில் பைக் ரிவர்ஸி கிரேமவுத் என்ற நகரிற்கு அருகிலுள்ள 'பெப்பரோவா' என்ற மலைப்பாங்கான பகுதியிலேயே இந்த நிலக்கரிச் சுரங்க வெடிப்பு ஏற்பட்டது. 500 அடிகள் (150 மீற்றர்) ஆழத்திலேயே மேற்படி பணியாளர்கள் இந்த அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

மரணமடைந்தவர்களில் 17 வயது முதல் 62 வயது வரையிலான சுரங்கப் பணியாளர்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களில் நியூஸிலாந்து நாட்டவர்களுடன் அவுஸ்திரேலியா, பிரிட்டன், தென் ஆபிரிக்கா ஆகிய நாட்டவர்களும் அடங்குகின்றனர்.






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

| அற்லஸ் கேள்வி - 284 | |
|---|---|
| **கேள்வி:** நியூஸிலாந்து சுரங்கத்துள் கசிந்த விஷ வாயுவின் பெயர் என்ன?<br>சரியான விடை..............................<br>உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.<br>அனுப்ப வேண்டிய முகவரி:<br>அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 284, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு. | போட்டி இல - 282 இன் சரியான விடை: ரஷ்யா, ஜப்பான்<br>**பரிசு பெறுவோர்**<br>விக்னேஸ்வரன் ரகுராம், 65 1/1 வைத்தியா வீதி, தெஹிவளை.<br>சி.தனீசன், 53, புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.<br>பீ.ஹேமாமாலினி, 6/1, வாரியபொல, மாத்தளை. |




## நேட்டோ நாடுகளுடன் இணங்கியுள்ள ரஷ்யா

ஏவுகணைத் தாக்குதல்களுக்கு எதிரான பாதுகாப்புத் திட்டங்களை வகுக்கும் நேட்டோ நாடுகளின் திட்டத்திற்கு தாமும் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

அண்மையில் லிஸ்பன் நகரில் நடைபெற்ற 'நேட்டோ' அமைப்பின் உச்சி மாநாட்டிலேயே மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

ரஷ்யா-ஜோர்ஜியா ஆகிய நாடுகளுக்கிடையே இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் ரஷ்யா கலந்து கொண்டுள்ள முதலாவது நேட்டோ மாநாடு இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுவோர் முக்கிய அரசியல் திருப்பம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த இணக்கப்பாடு குறித்து அமெரிக்க ஜனாதிபதியும் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த ஏவுகணை பாதுகாப்புத் திட்டமானது ஐரோப்பிய நாடுகளைப் பாதுகாக்க வல்லதாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### அவசரகால சட்டத்தின்கீழ்

## நேபாள வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றம்





நேபாள நாட்டில் ஸ்திரமான ஓர் அரசாங்கம் இல்லாத நிலையில், அந்நாட்டின் ஜனாதிபதி அவசரக்கால சட்டத்தின்கீழ் தனக்குள்ள அதிகாரத்தின் மூலம் வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றியுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் இந்த வரவு செலவுத்திட்டமானது அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆயினும், நாடாளுமன்றில் எந்தவொரு கட்சிக்கும் போதிய பெரும்பான்மைப் பலம் இல்லாதிருந்தமையால் அன்றிலிருந்து இன்றுவரை வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலை காணப்பட்டது.

ஆட்சியிலிருந்த சிறுபான்மைக் கட்சி கடந்த ஜூன் மாதம் தனது பலத்தை இழந்தமையால், பிரதமர் ஒருவரை நியமிப்பதற்காக, அந்நாட்டின் நாடாளுமன்றம் 16 தடவைகள் கூடியபோதிலும் பிரதமரைத் தெரிவு செய்துகொள்ள முடியாத நிலையே தொடர்ந்தது.

நேபாளத்தில் மாவோவாதிகளே, அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள போதிலும் அவர்களுக்கும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை இல்லாதிருக்கின்றது.

இத்தகைய நிலையிலேயே அவசரகால சட்டத்தின்கீழ் வரவு-செலவுத் திட்டத்தை ஜனாதிபதி நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தெரிந்து கொள்வோம்

◆ தாய்லாந்து நாடு ஆரம்பகாலத்தில் என்ன பெயர்கொண்டு அழைக்கப்பட்டது?



**'சியம்' தேசம்**

◆ 2007 ஆம் ஆண்டில் சமாதானத்திற்கான 'நொபெல்' விருது யாருக்கு வழங்கப்பட்டது?

**மேற்படி விருதானது இந்த வருடத்தில் இரண்டாகப் பிரித்து வழங்கப்பட்டது.**

**1. முன்னாள் அமெரிக்க உப ஜனாதிபதி அல்கோ (Algore)**

**2. சுற்றுச்சூழல் மாற்றம் தொடர்பான சர்வதேச அரசாங்கக் குழு (Inter Governmental Panel of Climate Change-IPCC)**



◆ 2007 ஆம் ஆண்டிலிருந்து தமது திரைப்படங்களில் 'புகைத்தல்' காட்சிகளை நீக்குவதற்குத் தீர்மானித்த உலகப் புகழ் பெற்ற திரைப்பட நிறுவனம் எது?

**டிஸ்னி நிறுவனம்**




◆ புதிய ஏழு உலக அதிசயங்கள் பெயரிடப்பட்ட சிறப்புத் தினம் எப்போது?

**2007.07.07**

◆ புதிய ஏழு உலக அதிசயங்கள் எந்த நாட்டில் வெளியிடப்பட்டது?



**போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில்**



◆ இந்தியாவின் முதலாவது பெண் ஜனாதிபதியும் தற்போதைய ஜனாதிபதியாகவும் பதவி வகிப்பவர் யார்?

**பிரதீபா பட்டீல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் காரோட்டப் போட்டி

இந்தியாவில் முதல் தடவையாக காரோட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அடுத்த வருடம் ஒக்டோபர் 30 ஆம் திகதி தொடக்கம் மேற்படி காரோட்டப் போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவின் உத்தப்பிரதேச மாநிலத்தின் 'கிரெட்டர் நொய்ட்டர்' என்ற நகரிலேயே மேற்படி முதல்தர காரோட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. ஏற்கனவே இதற்கான வாகன ஓடுபாதைகள் தயார் படுத்தப்பட்டு வருகின்றன.

தயார்படுத்தப்பட்டு வருகின்ற வாகன ஓடுபாதையானது 5.14 கி.மீற்றர் தூரத்தையும் 16 வளைவுகளையும் கொண்டதாகவே அமைக்கப்பட்டு வருகின்றது. குறித்த தயார்படுத்தல் பணிகள் எதிர்வரும் மே மாதமளவில் பூர்த்தியடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.





# உலகக் கிண்ண கிரிக்கெட் ஒளிபரப்பு வருமானம் ரூ.700 கோடி

அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளமை நாம் அறிந்ததே. மொத்தமாக 49



போட்டிகளைக்கொண்ட இந்த உலகக் கிண்ணப் போட்டிகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்வதற்கான அங்கீகாரத்தை 'ஈ.எஸ்.பி.என்' என்ற தொலைக்காட்சி நிறுவனம் பெற்றுள்ளது.

பெருமளவு பணத்தைச் செலுத்தி இந்த அனுமதியைப் பெற்றுள்ள மேற்படி நிறுவனம் அதன் மூலம் பெருமளவு பணத்தை வருமானமாக ஈட்டுவதற்கென பலவிதமான திட்டங்களை வகுத்துள்ளது. அதற்கமைய, ஏராளமான முன்னணி வர்த்தக நிறுவனங்களுடன் இது தொடர்பான அனுசரணை ஒப்பந்தங்களை இந்த நிறுவனம் செய்துள்ளது.

மேலும், போட்டி ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும்போது விளம்பரங்களை ஒளிபரப்புவதற்கு 10 வினாடிகளுக்கு இந்திய நாணயப் பெறுமதிப்படி 40 லட்சம் ரூபா அறவிடப்படவுள்ளது.

அதுமட்டுமன்றி, கேபிள் டிவி இணைப்பாளர்களுக்கும் பிரத்தியேக கட்டணம் அறவிடப்படவுள்ளது.

இவ்வாறு விளம்பர ஒப்பந்தங்கள் ஊடாக, பெருந்தொகைப் பணத்தை ஈட்டவுள்ள குறித்த தொலைக்காட்சி நிறுவனம் கிட்டத்தட்ட 700 கோடி (இந்திய பெறுமதியில்) ரூபாவை லாப இலக்காகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த ஐ.பி.எல். இல்

# இறுதிப் போட்டிக்கான அணித் தேர்வில் மாற்றம்

நான்காவது ஐ.பி.எல். போட்டிகள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 22 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிக்கென போட்டியாளர்களை ஏலம் விடுதல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. 20/20 ஓவர்களாக நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளில் இம்முறை பத்து அணிகள் பங்கு கொள்ளும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த காலங்களில் எட்டு அணிகளே கலந்து கொண்டபோதிலும் இம்முறை மேலும் இரண்டு புதிய அணிகள் சேர்க்கப்பட்டமையால் பத்து அணிகள் பங்குபற்றும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இறுதி நேரத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் ஐ.பி.எல். போட்டிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளமையால் வழக்கமான எண்ணிக்கையின்படி 8 அணிகளே அடுத்த ஐ.பி.எல் இல் பங்குபற்றவுள்ளன. இதன்படி, 60 போட்டிகள் நடைபெறவுள்ளதுடன், அரையிறுதியில் சிறுமாற்றமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது, முதல் சுற்றில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் முதலாவது அரையிறுதியில் மோதும். அவ்வாறே மூன்றாம், நான்காம் இடங்களைப் பெற்ற அணிகள் இரண்டாவது அரையிறுதியில் மோதும்.

இதில் முதலாவது அரையிறுதியில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின்ற அதேவேளை, தோல்வி அடைகின்ற அணிக்கு இன்னுமொரு வாய்ப்புக் கிட்டும். அதாவது, இரண்டாவது அரையிறுதியில் வெற்றி பெறும் அணியுடன் அந்த அணி மோதுவதற்கு மற்றுமொரு வாய்ப்பு வழங்கப்படும். அதில் வெற்றி பெறும் அணியே இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் மற்றைய அணியுடன் மோதும்.

## வடக்கு, கிழக்கு

# விளையாட்டுக் கழகங்களுக்கு அவுஸ்திரேலியா உதவி





இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 25 விளையாட்டுக் கழகங்களுக்கு உதவி வழங்குவதற்கு அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது.

'சோஆ' என்ற அகதிகள் பராமரிப்புத் திட்டத்தின் ஊடாகவே மேற்படி உதவியை அவுஸ்திரேலியா வழங்கியுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள விளையாட்டுக் கழகங்களிற்கு மேற்படி அமைப்பு வழமையாக உதவி வரும் ஓர் அமைப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏராளமான போட்டிகள் தொடர்பாக பயிற்சி முகாம்களை நடத்துவதுடன், தேவைப்படுகின்ற விளையாட்டுத்துறை உபகரணங்களையும் இந்த அமைப்பு வழங்கி வருகின்றது.

அமைப்பின் ஊடான இந்த உதவிகளை வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் கெத்தி லூக்மன் இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கையில் விளையாட்டு இன்றியமையாத ஓர் அம்சமாக இருப்பதாகவும் விளையாட்டு மற்றும் உடற் பயிற்சிகளில் இளைஞர்களின் பங்களிப்பை மேலும் அதிகரிப்பதற்காகவே இத்தகைய உதவிகளை தமது நாடு வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பிரயன் லாரா துடுப்பாட்ட ஆலோசகர்



மேற்கிந்திய முன்னாள் வீரரான பிரயன் லாரா சிம்பாப்வே அணிக்கு துடுப்பாட்ட ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளார். எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டிகள், பங்களாதேஷுடன் சிம்பாப்வேயில் நடைபெறவுள்ள போட்டிகள் ஆகியனவற்றிற்கு லாரா துடுப்பாட்ட ஆலோசகராகப் பணியாற்றவுள்ளார்.

2008 ஆம் ஆண்டு பிரயன் லாரா சர்வதேச கிரிக்கெட் துறையிலிருந்து ஓய்வு பெற்றமையும் பின்னர் அவர் சிம்பாப்வேயில் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருவதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 இல் 'சந்திரயான் 2' விண்ணுக்கு ஏவத் திட்டம்

2013 ஆம் ஆண்டளவில் சந்திரனை நோக்கி சந்திரயான் 2 விண்கலத்தை அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக இந்திய விண்வெளி ஆய்வு மையத் (ISRO) தலைவர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தின் 51 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



ரஷ்யாவுடன் இணைந்து GSLV ரொக்கெட் மூலமே சந்திரயான் 2 நிலவுக்கு அனுப்பப்படவுள்ளது. இதுதவிர, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து PSLV ரொக்கெட் மூலம் விரைவில் Resort



Sat-2, G Sat-12 ஆகிய விண்கலங்கள் அனுப்பப்படவுள்ளன. அவ்வாறே, GSLV ரொக்கெட் மூலம் G Sat-5b, G Sat-7 ஆகிய விண்கலங்கள் அனுப்பப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், G Sat-8, Insat 3d ஆகிய விண்கலங்களும் விண்ணுக்கு ஏவத் தயார் நிலையில் இருப்பதாகவும் இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், சந்திரனுக்கு மாணவர்களை சுற்றுலாவாக அனுப்பும் திட்டம் பற்றி தற்போதளவில் ரஷ்யாவுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# அன்றைய பூமியை ஒத்திருக்கும் இன்றைய டைட்டன்





நமது ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள சில கோள்களுக்கு உபகோள்கள் உள்ளன. சிலவற்றுக்கு உபகோள்கள் இல்லை. அதன்படி, நம்முடைய பூமிக்கு ஓர் உபகோளே உள்ளது.அதுதான் 'சந்திரன்'. (Luna) அவ்வாறே, அதிக எண்ணிக்கையிலான உபகோள்களைக்கொண்ட கிரகம் வியாழன் ஆகும். இதற்கு 63 உபகோள்கள் உள்ளன.அடுத்த இடத்தை வகிப்பது சனிக்கிரகம். இதற்கு 61 உபகோள்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த 61 உபகோள்களிலும் மிகப் பெரியது 'டைட்டன்' ஆகும். டைட்டன் உபகோளானது புதன் கோளை விடவும் அளவில் பெரியது. சூரியக் குடும்பத்திலேயே மிகப்பெரிய உபகோளான 'கெனிமீட்' (வியாழனின் மிகப்பெரிய உபகோள்) இற்கு அடுத்த இடத்தை வகிப்பது இந்த டைட்டன் ஆகும்.

டைட்டனை ஆராய்வதில் தற்போது விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். காரணம், டைட்டன் ஆனது நமது பூமியை ஒத்திருப்பதாக அனுமானிக்கப்பட்டுள்ளமை ஆகும். பூமியை ஒத்திருக்கின்றதெனக் கூறப்படுவதானது இன்றைய பூமியை ஒத்திருக்கின்றது என்பதன்று; மாறாக, சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி எந்தத்



தன்மையில் இருந்ததோ, அதே தன்மையில்தான் தற்போது டைட்டன் உள்ளது எனக் கூறப்படுகின்றது.

பூமியை சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பார்த்திருந்தால் எவ்வாறு இருந்திருக்குமோ, அதே மாதிரிதான் டைட்டன் தற்போது அமைந்துள்ளது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனவே, டைட்டனைத் தொடர்ந்து ஆய்வு செய்து வந்தால், உயிரினங்கள் எவ்வாறு தோன்றியிருக்கும் என்பதைக் கண்டறிய முடியும் என்று விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

எனவே, டைட்டனை ஆராயும் நோக்கில் கெசினி விண்கலத்தின் மூலம் Huygens ஆய்வுக்கலத்தை விஞ்ஞானிகள் அனுப்பினர். Huygens மேற்கொண்ட ஆய்வின்படி; டைட்டனில் பனிப் பாறைகள், கடல், கால்வாய்கள்





போன்ற நீர்நிலைகள் காணப்படுவதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால், டைட்டனின் வளிமண்டலம் மிகவும் அடர்த்தியாக இருப்பதாக இந்த ஆய்வுக்கலம் தெரியப்படுத்தி உள்ளது.

Huygens மூலம் பெறப்பட்ட மேலதிக தகவல்களின்படி, டைட்டனில் இருக்கும் வளி செம்மஞ்சள் நிறத்தில் இருக்கக்கூடும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். காற்றிற்கு நிறமில்லாததால்தான் பல்வேறு ஆய்வுகளைத் துல்லியமாக நாம் மேற்கொள்ள முடிகின்றது. எனினும், டைட்டனில் இருக்கும் அடர்த்தியான காற்றினால், Huygens எடுத்த புகைப்படங்களில், டைட்டனின் தரைப்பகுதியில் என்ன இருக்கிறது என்பதைத் துல்லியமாக அறிய முடியவில்லை என்று விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# மிகப்பெரிய, திறன் மிக்க தொலைநோக்கி

மனிதன் வானியலில் இந்த அளவுக்கு முன்னேறக் காரணமாக அமைந்தது தொலைநோக்கியாகும். இதை நன்கு பயன்படுத்தி முதன்முதலில் மக்களின் கவனத்தை திசைதிருப்பியவர் கலிலியோ கலிலி







ஆவார். ஆனாலும், தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் என்கிற பெருமை ஜேர்மனி நாட்டவரான ஹேன்ஸ் லிப்பேர்ஷி என்பவரையே சாரும். 1608 ஆம் ஆண்டில் தான் இவர் தொலைநோக்கியை உருவாக்கினார்.

எவ்வாறாயினும், ஒரு பொருளை லட்சக்கணக்கான மடங்கு உருப்பெருக்கிக் காட்டும் திறனுடைய, தொலைநோக்கிகளும் இன்றளவில் பயன்பாட்டில் உள்ளன. அதன்படி, உலகிலேயே மிகப்பெரியதும் திறன் வாய்ந்ததுமான தொலைநோக்கியாக, அமெரிக்காவின் கெலிஃபோர்னியா மாநிலத்தில் 'பாலோமார்' என்னும் மலைமீது அமைக்கப்பட்டுள்ள 'பாலோமார்' தொலைக்காட்டியே (Palomar Observatory) திகழ்கின்றது. இது ஓர் உருவை 9 லட்சம் மடங்கு பெருப்பித்துக் காட்டும் திறனுடையது.

200 அங்குலக் குறுக்களவும் 19 தொன் எடையும் உள்ள விசாலமான குழிவாடியைக்கொண்ட இந்தத் தொலைநோக்கியை நிறுவ 20 ஆண்டுகள் எடுத்துள்ளன. இந்தத் தொலைநோக்கியானது விண்மீன்கள் குறித்த பல தகவல்களைத் துல்லியமாக அறியவும் அவற்றின் பருமன், எடை, செறிவு, வேகம் போன்றவற்றை துல்லியமாக அறியவும் பெருமளவு உதவி வருகின்றது.



# விண்வெளி செல்லும் 'ரொபோ'



பூமியில் இருந்து சுமார் 300 கி.மீ தொலைவில் சுற்றி வருகிறது 'சர்வதேச விண்வெளி மையம்'(International Space Station). அங்கு, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் சென்று தங்கி ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை நாம் அறிந்த விடயமே. ஆனால், இனி வரும் காலங்களில் இந்த விண்வெளி வீரர்களுடன் சேர்ந்து இன்னொன்றும் சர்வதேச விண்வெளி மையத்தில் பணியாற்றவுள்ளது. அதுதான் Robonaut 2 எனப் பெயரிடப்பட்டுள்ள ரொபோ.

சர்வதேச விண்வெளி மையத்திலுள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் நோக்கிலும் சர்வதேச விண்வெளி மையப் பராமரிப்பு, செயலிழக்கும் கருவிகளைப் பழுது பார்த்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வசதியாகவுமே Robonaut 2 எனும் ரொபோவை நாஸாவும் 'ஜெனரல் மோட்டர்ஸ்' நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன.



புவியீர்ப்பு விசை இல்லாத இடத்திலும் இந்த Robonaut 2 திறம்பட செயற்படுகிறதா? என்பதற்கான இறுதிக்கட்டப் பரிசோதனை தற்போதளவில் நடந்து வருகின்றது. இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கை முடிந்த பின்னர், இந்த ரொபோ விண்ணுக்குப் புறப்படவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழுள்ள சொற்களை எழுத்துக்கூட்டத்திற்குள் இனங்கண்டு, நிறந்தீட்டுக 3


F E A S T C E I
H K M P U V F N
T Z R B R E A D
H A U F K O L I
A P P L E W L A
N E I X Y Q T N
K Y S O N L G S
S D J C O R N B

1. Apple 5. Feast
2. Bread 6. Indians
3. Corn 7. Thanks
4. Fall 8. Turkey

## எத்தனை உள்ளன? 1



## இடைவெளிகளை நிரப்புக 2



**5**

(A) ரோமன் இலக்கங்களில் எழுதுக

1) 102 - ..........................
2) 54 - ..........................
3) 407 - ..........................

(B) பெறுமதி கூடிய இலக்கம் எது?

1) XX, VIII - ..........................
2) CV, XC - ..........................
3) CM, ML - ..........................





தயாரிப்பு - நுஸ்பா கெளஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.12.08 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 289
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## சரியான விடையுடன் இணைக்க 4

| | |
|---|---|
| 1. உலகின் மிக உயர்ந்த சிகரம் | 1. திபெத் |
| 2. உலகின் மிகப் பெரிய பாலைவனம் | 2. பர்ஜ் டுபாய் |
| 3. உலகில் வருடாந்தம் அதிக மழைவீழ்ச்சியைப் பெறும் பகுதி | 3. எவரெஸ்ட் |
| 4. உலகில் மிகப்பெரிய மேட்டுநிலம் | 4. (ல்)லோரோ-கொலம்பியா |
| 5. உலகின் மிக உயரமான கட்டடம் | 5. சஹாரா |

## அறிவுக்கு விருந்து 286 விடைகள்


**போட்டி: 01**

1. தாயகம் 2. பள்ளிக்கூடம்
3. அநாவசியம் 4. கிட்டிப்புள்
5. மருத்துவர்


**போட்டி: 02**

1. ஏரி நிறைந்தால் கரை கசியும்.
2. கெடுவான் கேடு நினைப்பான்.
3. பசியுள்ளவன் ருசி அறியான்.
4. மருந்தும் விருந்தும் மூன்று வேளை.

**போட்டி: 03**




**போட்டி: 05**




## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 286 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
இஸ்ரத் பானு, 33/B, அளுத்வத்த, கஹடகஸ்திகிலிய.

**போட்டி: 02**
எம்.றாஸித், 680, புன்னைக்குடா வீதி, ஏறாவூர்-03.

**போட்டி: 03**
ஏ.அஃப்ரா, பள்ளிவாசல் மாவத்தை, மனையாவெளி.

**போட்டி: 04**
டி.பாலினி, 57/5, பூணாகலை வீதி, பண்டாரவளை.

**போட்டி: 05**
ஏ.உமேஸ்கர், 93, மாத்தளை வீதி, இறத்தோட்டை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- வி.இராகவன், தொல்புரம்.
- சஜித் ஷாராஸ், தர்கா நகர்.
- அஸாம் அஸாட், கொழும்பு-12.
- த.உதயகுமார், சுளிபுரம்.
- எம்.அர்ஷாட், தர்கா நகர்.
- இக்ரம் அஹமட், ஏறாவூர்-03.
- மஷ்ரிபா நஸீம், திக்குவல்லை.
- ஆர்.எம்.ரிகாஸ், நாவலப்பிட்டி.
- உ.லோகேஷ்வரநாத், கொட்டகலை.
- க.தனுஷா, வட்டவளை.

## விஜய் வாசகர் மடல்



'விஜய்'யில் வெளிவந்த 'உலகப் புகழ்பெற்ற ஓவியர் பிகாசோ', 'மாணவர்களுக்குப் பயன்படும் யோகாசனம்', 'பிரபஞ்சத்தின் ஆயுள்', 'வண்ணத்துப் பூச்சியின் காதுகள்', 'தெரிந்து கொள்வோம்' போன்ற அம்சங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. இவற்றை அறியத் தந்த விஜய்க்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**-டி.ஷங்கரி, தரம்-7C, சென்.மேரிஸ் ம.கல்., பொகவந்தலாவ.**

உன்னில் வெளிவரும் தொடர் ஆக்கங்களும் நிலையான தலைப்புகளின் கீழான ஆக்கங்களும் எம் கல்வியைப் போஷிப்பதோடு, உன்னை நேசிக்கவும் வைக்கின்றன. போட்டிகள் மூளைக்கு வேலையாகவும் பொழுதுபோக்காகவும் அமைகின்றன.

**-எஸ்.ரஹ்மதுல்லாஹ், தரம்-8D, ஸாஹிரா தே.கல்., மாத்தளை.**

'விலங்குகள் மற்றும் பறவைகளின் உணவு முறைகள்', 'தெரிந்து கொள்வோம்', 'சிறுகதைகள்' போன்றன வாசித்துப் பயன்தரவும் எம்மை மகிழ்ச்சிப்படுத்தவும் தவறவில்லை. 'கிருமிநாசினியைக் கண்டுபிடித்தவர்' எனும் ஆக்கம் கல்விக்கு பெரும் உதவியாக அமைந்தது. **-ஸில்மியா யூசுஃப், அபேசிங்கபுர, பெரியமுல்லை.**



'புதிய குரங்கினம்', 'புகழ் பெற்ற ஓவியர் பிகாசோ', 'ஹஜ்ஜுப் பெருநாள்', 'லாமா', 'கிருமிநாசினியைக் கண்டுபிடித்தவர்' போன்ற ஆக்கங்கள் அறிவுத் தேடலுக்கு சிறந்த வரப்பிரசாத மாகும். 'ஹஜ்' பற்றிய ஆக்கம் அதுபற்றி எமக்குப் பூரண விளக்கத்தைத் தந்தது.

**-கே.சுதன்; எம்.வர்மன், அரம்பேகம, பிலிமதலாவை.**

ஒவ்வொரு வாரமும் 'விண்வெளித் தகவல்கள்' மூலம் பல பயன்களை அடைந்து கொள்கின்றேன். 'விஜய்', எனது கல்வி முன்னேற்றத்துக்கு மிகவும் உதவியாக இருக்கின்றது. நீ பல்லாண்டு நிலைக்க வாழ்த்துகின்றேன்.

**-எம்.வஸீம், அல்-மீஸானிய்யாஹ் அ.கல்., குருகொடை.**

'தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்' எனது தம்பி அப்பரீட்சையில் சித்திபெற சிறந்த வழிகாட்டியாகவும் துணையாகவும் அமைந்தது. தனியார் வகுப்புகளுக்குச் செல்ல வசதியில்லாதவர்களுக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம் நீ. இந்தப் பணி தொடரவும் உன்னால் பலரும் நன்மையடையவும் பிரார்த்திக்கின்றேன்.

**-க.நீஷா, கல்லூள, மடுல்சீமை.**

மாணவர்களின் அறிவுத்திறனை வளர்ப்பதற்காக பல விடயங்களை சுமந்து வருகின்ற 'விஜய்'க்கு எனது மனமார்ந்த நன்றிகள். குறிப்பிட்டுச் சொல்ல முடியாதளவுக்கு உன்னில் பிரசுரமான அனைத்தும் மாணவர் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெறும் என்பது உறுதி.

**-ஹப்ஸா பானு, பாத்திமா ஸஹ்ரா ம.அ.கல்., ஓட்டமாவடி-03.**

'மாணவர்களுக்குப் பயன்படும் 'யோகாசனம்' பற்றி வாசித்தறிந்து கொள்ள மேலும் ஆவலாக உள்ளோம். 'சங்கிலி மன்னன்', 'இராமாயணம்' போன்றவை பாடசாலைக் கல்விக்கு உதவியாக உள்ளன. பாடங்களுடன் தொடர்புடைய அம்சங்கள் எமக்குப் பூரண விளக்கத்தைக் கொடுப்பதாக அமைந்துள்ளன.

**-இரா.ராகுலன், தொல்புரம் மத்தி, தொல்புரம்.**

இந்த இதழில் (01.12.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 08.12.2010.

அனுப்ப வேண்டிய முகவரி: வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வரலாற்றில் சங்கிலி மன்னன்



வரலாற்றுத் தொடர்... 23

அரியாலையூர் சி.சிவதாசன்

"பெண்ணே! இந்த மண்ணின் கண்ணே! உன்போன்ற பற்று நிறைந்தவர்களால்தான் இந்தத் தமிழ்மண் இன்றும் புனிதம் நிறைந்ததாக இருக்கின்றது. அஞ்சாதே! நீ சென்று வா" என்றான் சங்கிலி மன்னன்

## காக்கைவன்னியின் கபடம்

அப்பாமுதலியின் மகள் தன் தோழியிடம் நஞ்சினை ஒத்த என் தந்தை சொன்னதைச் செய்யாதே! உன் இனத்துக்குத் துரோகி ஆகாதே! செந்தமிழர் காலம் காலமாக வாழும் எம்மண்ணை, நல்லூரான் ஆட்சி செய்யும் இந்த மண்ணை, எம் பாட்டன் பாட்டி கூடிக்குலாவிய இந்த மண்ணை, பைந்தமிழ்ப் பாவலன் பாடலிசைத்துப் பரிசாகப் பெற்ற இந்த மண்ணை. அந்தப் போர்த்துக்கேயப் பறங்கியருக்கு விட்டுக் கொடுப்பதா? அவன் ஆட்சியின் கீழ் நாம் அடங்கி வாழ்வதா? போ! உடனே போ! என் தந்தை என்ற தீயான் உன்னிடம் சொன்னவற்றை அப்படியே மன்னனிடம் சொல்! எமக்கு நாடு முக்கியம். அதனை ஆளும் மன்னன் முக்கியம். நன்றே செய்! அதை இன்றே செய்! அதுவே தமிழ்ப் பெண்ணான உன் கடமை" என்றாள்.

அதுகேட்டுத் தோழி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றாள். அரண்மனைக்குப் போய் சங்கிலி மன்னனைச் சந்தித்து வணங்கினாள். பின்னர் விடயத்தைக் கூறலானாள். "மன்னா! உங்களைச் சுற்றி சிலந்தி வலை போல் சூழ்ச்சி வலை பின்னி இருக்கிறான் ஊர்காவற்றுறை சிற்றரசன் காக்கைவன்னியன். அந்தச் சதிக்கு உடந்தையாக உங்கள் மாமன் அப்பாமுதலியும் ஒன்றும் அறியாதவர் போல் நடிக்கும் உங்கள் அண்ணன் பரநிருபசிங்கனும் செயற்படுகிறார்கள். மன்னவனே! உங்களை என் தோழி இன்றிரவு தனியே சந்திக்க விரும்புவதாகக் கூறும்படி உத்தரவிட்டுள்ளார் அப்பாமுதலி. அவ்வாறு செய்யாது போனால் என்னைக் கொலை செய்வதாகவும் பயமுறுத்தியுள்ளார். பறங்கியர் உதவி தனக்கிருப்பதாகவும் நான் உங்களை அவர் கூறியபடி கூறி வரவழைத்தால் வேண்டிய மட்டும் பொன், நகைகள் அள்ளிக் கொடுப்பதாகவும் கூறியுள்ளார். மன்னவா! என் நெஞ்சம் பதறுகிறது. என் தோழியிடம் அவள் தந்தையின் செயல் பற்றிக் கூறியுள்ளேன். என்னைக் கொலை செய்வார்கள் என்பதற்காக நான் அஞ்சவில்லை. சைவமும் தமிழும் வாழும் எம் நாட்டினை தமிழ் ஆய்ந்த நல்லை முருகன் கோவில் கொண்ட நாட்டினை, எம் தமிழினம் வாழும் இந்நாட்டினை, நல்லாட்சி நடைபெறும் இந்த அழகுமிகு யாழ்ப் பாண நாட்டினை, எங்கிருந்தோ வந்த போர்த்துக்கேயப் பறங்கியை ஆள விடுவதா? மன்னா! விரைந்து முடிவு எடுங்கள்" என்று கூறி அஞ்சி நடுங்கினாள் அவள்.

"பெண்ணே! இந்த மண்ணின் கண்ணே! உன்போன்ற நாட்டுப்பற்று நிறைந்தவர்களால்தான் இந்தத் தமிழ் மண் இன்றும் புனிதம் நிறைந்ததாக இருக்கின்றது. அஞ்சாதே! நீ சென்று வா" என்றான் சங்கிலி மன்னன்.

சங்கிலி மன்னனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. காக்கைவன்னியனின் கபடத்தை எண்ணி மனதில் நொந்தான்.

அப்பாமுதலியின் அறிவுக்கு என்ன நேர்ந்தது என சிறிது நேரம் சிந்தித்தான். அரச பதவி வேண்டாம் அமைச்சனாகவே இருந்திடுவேன் என்ற அண்ணன் பரநிருபசிங்கனை நினைத்துப் பார்த்தான். அறிவில் மேலான மருத்துவம் தெரிந்த என் அண்ணனுக்கா இந்த அற்ப ஆசை. எதுவும் செய்யத் தோன்றாதவனாக அப்படியே அரியணையில் சாய்ந்தான் மன்னன் சங்கிலி.

அங்கே, அப்பா முதலியின் மகளோ மன்னனிடம் சென்ற தோழியின் வரவுக்காகக் காத்திருந்தாள். அவள் நெஞ்சம் தந்தையின் துரோகச் செயலை எண்ணிப் பார்த்தது. பறங்கியர்கள் நாடு பிடிக்கும் கயவர்கள். தம் மதத்தைப் பரப்ப வந்தவர்கள். அவர்களுக்கு இவர்கள் உதவுவதா? மங்கையர்கள் மானம் போக, மறத்தமிழர் வீரம் மாய, எம்தமிழ் அழிந்து போக, எம்மதம் அற்றுப்போக இந்தக் கயவர்களுக்கேன் இந்த எண்ணம். எங்கள் மண்ணைக் காட்டிக்கொடுக்க இவர்கள் முயற்சிப்பது ஏன்?" இவ்வாறு பதறினாள் அப்பாமுதலி பெற்ற மகள், "பதவி ஆசைக்காக உறவையே கொல்லத்துணிந்த இவரும் என் தந்தையா?" என்று கண்ணீர் சிந்த, நெஞ்சம் துடிக்க, மயங்கித் தரையில் சரிந்தாள் மங்கையவள். அப்போது, அங்கே ஓடிவந்த அவள் உயிர்த்தோழி வீழ்ந்தவளைத் தண்ணீர் தெளித்து விழிக்கச் செய்தாள்.



அப்பாமுதலி பெற்ற மகள், "பதவி ஆசைக்காக உறவையே கொல்லத்துணிந்த இவரும் என் தந்தையா?" என்று கண்ணீர் சிந்த, நெஞ்சம் துடிக்க, மயங்கித் தரையில் சரிந்தாள் மங்கையவள். அப்போது அங்கே ஓடிவந்த அவள் உயிர்த்தோழி வீழ்ந்தவளைத் தண்ணீர் தெளித்து விழிக்கச் செய்தாள்

அப்பா மகளும் தன் தோழியைக் கண்டதும் ஆறுதல் கொண்டாள். தனது ஒரு மயிர் இழப்பினும் உயிர் வாழாதாம் கவரிமான். தமிழ்ப் பெண்களும் அத்தகையோர்தான்! கணவனுக்காகத் தேர்ச்சில்லில் அச்சாணியாக விரல் கொடுத்தவளும், கணவன் இறந்த செய்தி கேட்டு எதிரியை வெட்டி வா! வென்று வா! என்று போருக்குத் தன் ஒரே மகனை அனுப்பியவளும் தமிழ்ப் பெண்ணேதான்! அந்தப் பரம்பரையில் வந்த தமிழ்ப் பெண்கள் மன்னனைத் தங்கள் தமிழ் மறவனைக் காட்டிக்கொடுக்கத் துணிவார்களா? தோழி நடந்ததையெல்லாம் தன்னுயிர் தோழியான அப்பாமுதலியின் மகளிடம் கூறிக்கொண்டிருந்தாள். அவ்வேளையில் அங்கே கொடியோன் அப்பாமுதலி வந்து நின்றதை அவர்கள் காணவில்லை. அதனையடுத்து அந்தக் கொடூரம் நிகழ்ந்தது.

(அடுத்தவாரம் நிறைவுறும்)

# யோகாசனம் பயில்வோம் - 2



## வச்சிராசனம்

**செய்யும் முறை:**

கால்களை மடக்கி நிமிர்ந்து அமர்த்தல் வேண்டும். படத்தில் காட்டியபடி, கைகள் 'சின் முத்திரை' பிடித்தபடி இருத்தல் வேண்டும். உடம்பு நேர்கோட்டில் முள்ளந்தண்டு அமைந்திருத்தல் வேண்டும்.

**பயன்கள்:**

வச்சிரம் போன்று கெட்டியாக மனதைப் பிடிக்கக்கூடிய ஆசனம் என்பதனால் வச்சிராசனம் எனப்பெயர் பெற்றது. தியானம் செய்யவும் மூச்சுப் பயிற்சிகள் செய்யவும் சிறந்த ஆசனம். முழங்கால்கள் மடிக்கப்படுவதால் நல்ல இரத்த ஓட்டம் கிடைக்கப் பெறுகிறது. இதன்மூலம் முழங்கால் வியாதிகள் தீரும், கால் தொடைச்சதைப் பகுதிகள் உறுதி பெறும். (தொடரும்)

# 'மதர்போர்ட்'டில் பேனைத் தாங்கி



கணினிப் பாவனையின்போது, கழிவுகளாக ஒதுக்கப்படுகின்ற கணினி உதிரிப்பாகங்கள் சூழலை மாசடையச் செய்வதுண்டு. எனவே, இதனைத் தவிர்க்கும் பொருட்டு புதிதாக தயாரிக்கப்பட்டுள்ளதே Motherboard Pencil Cup ஆகும். கணினியின் மதர்போட்டிலுள்ள பாகங்களை இணைத்து பேனா, பென்சில் போன்றவற்றை செருகி வைக்கக்கூடியதாக இது வடிவமைத்து தயாரிக்கப்பட்டுள்ளது. காரியாலய மேசையிலோ, கல்வி கற்கும் மேசையிலோ இதனை வைத்தால் அழகாகவும் பயன்மிக்கதாகவும் இருக்கும். இதன் அளவானது 3.25×3.25×4 அங்குலம் கொண்டதாகும். இதன் விலை 20 அ.டொலர்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி ஐயங்கள்

✱ **சில சந்தர்ப்பங்களில் கணினியை இயக்கும்போது 'Frequency Over range' என்ற வார்த்தைகள் திரையில் தோன்றுவதுடன் கணினி செயலிழந்து விடுவதுண்டு. இந்தக் கோளாறினை எவ்வாறு நிவர்த்தி செய்வது?**

CPU Settings இல் உள்ள சில கோளாறுகளே இதற்குக் காரணமாகும். அதாவது, மதர்போட்டில் அமைக்கப்பட்டுள்ள Frequency யை விட CPU வில் உள்ள Frequency குறைந்து காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அது ஓவர் குலொக்கிங் (Over Clocking) ஆவதே இதற்குக் காரணமாக அமைகின்றது. இந்தக் கோளாறை தவிர்ப்பதற்கு மதர்போர்ட்டில் உள்ள Frequency ஐ மீண்டும் சரியான வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும் அல்லது Auto நிலையில் வைத்தல் வேண்டும்.



✱ **மந்தமான வேகத்தில் இயங்கும் கணினியின் தொழிற்பாட்டை விரைவுபடுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய விசேட 'செட்டிங்ஸ்' எவை?**

இதற்கென்று விசேட செட்டிங்ஸ் ஒன்றும் கிடையாது. ஆனால், கணினியில் ஒன்றுக்கொன்று பொருத்தமான கட்டமைப்பு பாகங்களைப் பாவிப்பதன் மூலமும் மதர்போர்ட்டில் சீமோஸ் செட்டிங்ஸ் (CMOS-Complementary Metal-Oxide-Semi Conductor) முறையை சரியாக அமைத்திருந்தாலும் உரிய வேகத்தைப் பெற முடியும். மேலும், கணினியில் சிஸ்டம் யுனிட் (System Unit) பகுதியில் போதிய வெப்ப வெளியேற்றம் சீராக இல்லாவிட்டாலும் கணினியின் வேகம் குறைவாகவே இருக்கும். எனவே, இதனையிட்டும் உரிய கவனத்தில் கொள்ளல் அவசியமாகின்றது.

✱ **கணினில் யூஸர் எக்கவுண்ட் (User Accounts) இரண்டு காணப்படுவதுண்டு. இதில் ஒரு எக்கவுண்ட்டில் சேர்க்கப்படும் ஃபயில்ஸ், ஃபோல்டர்ஸ், புரோகிராம் (Files, Folders, Programe) ஆகியவற்றை மற்றைய எக்கவுண்ட்டிலும் Open செய்து பார்க்க முடிவதுண்டு. எனவே, அவ்வாறு அல்லாமல் ஒரு எக்கவுண்ட்டில் மட்டுமே இவற்றை சேர்க்கக்கூடிய வழிமுறை உள்ளதா?**

'யூஸர் எக்கவுண்ட்'டின் ரகசிய மையமாக கருதப்படுவது டெக்ஸ்டொப், மைடொக் சியூமன்ட் ஆகிய இடங்களும் ஈ-மெயில் ஆகியனவுமாகும். இவற்றைத் தவிர, ஏனைய டிஸ்க்குகள் அனைத்தையும் ஏனையவர்களும் திறந்து (Open) பார்க்கக்கூடியதாகவே இருப்பதுண்டு. அதாவது, எந்தவொரு புரோகிராமும் இன்ஸ்ட்டோல் செய்யும்போதும் அவை அனைவருமே பார்வையிடக்கூடியவாறு பொதுவானதாகவே 'இன்ஸ்ட்டோல்' ஆகும். ஆனாலும், அநேகமான மென்பொருட்கள் யூஸர் எக்கவுண்ட்களுக்கு ஏற்றபடியே தொழிற்படும். அவற்றை இன்ஸ்ட்டோல் செய்யும்போது 'Me only' அல்லது 'Anyone' அல்லது 'ஒப்ஷன்' இதில் எதையாவது ஒன்றைத் தெரிவு செய்து அவற்றின் வழியே 'இன்ஸ்ட்டோல்' செய்வதன் மூலம் தனி எக்கவுண்ட்டில் ஒருவர் மட்டுமே பார்க்கக்கூடியவாறு அமைத்துக் கொள்ளமுடியும்.

✱ **கண்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய கதிர்கள் கணினித் திரையின் வழியே வெளியேறுகின்றதா?**

கணினித் திரையில் (மொனிட்டர்) வெளிவருவது பொதுவான ஒளியே ஆகும். இது கண்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது. பழைய 'சீஆர்டீ மொனிட்டர்'களில் வெளிவருவது தொலைக்காட்சிப் பெட்டியிலிருந்து வெளிவரும் ஒளியைவிடக் குறைந்த அளவிலான ஒளியே ஆகும். இதனைவிட, இன்னும் குறைவான ஒளிவீச்சே எல்சீடீ மற்றும் எல்ஈடீ திரைகளில் (மொனிட்டர்) இருந்து வெளிவருகின்றன. இருப்பினும், கணினித் திரையிலிருந்து வெளிவருகின்ற ஒளியை நீண்ட நேரம் அவதானித்துக்கொண்டிருப்பதால் கண்கள் சோர்வடைவதைத் தவிர்ப்பதற்கு கணினித் திரைக்கு ஸ்கிரீன் ஃபில்ட்டர் (Screen Filter) பயன்படுத்துவது நல்லதாகும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 01, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org